பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 16 வெள்ளிக்கிழமை (02-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:341

# மூதூரில் காவல் நிலை மீது புலிகள் பெரும் தாக்குதல்!

## பதினொரு பொலீஸார் உயிரிழப்பு; 20க்கும் அதிகமானோர் காயம்!!

கொழும்பு,நவம்பர்2

**திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் காவல் நிலை ஒன்றில் மீது நேற்றுப் பிற்பகல் பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தி அதனைக் கைப்பற்றிய புலிகள், பின்னர் அங்கிருந்து வெளியேறினர். இந்தத் தாக்குதலில் பதினொரு பொலீஸார் உயிரிழந்தனர்; மேலும் பதினொரு பொலீஸாரும் ஆறு இராணுவத்தினரும் காயமடைந்தனர்.**

**பின்னர் அப்பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்கள் மற்றும் மோதல்களில் சிக்கி ஐந்து பொதுமக்கள் காயமடைந்த்னர்.**

மூதாருக்குத் தெற்கே மூன்று கிலோமீற்றர்கள் தொலைவில், மூதூர - கதிரவெளி வீதியில் 64ஆம் கட்டையில் அமைந்துள்ள பொலீஸ் - இராணுவக் கூட்டுக் காவல் நிலைமீதே, சுமார் நாற்பது முதல் அறுபது பேர்களைக் கொண்ட புலிகளின் அணி, சிறிய ரக ஆயுதங்களைக் கொண்டு இத்திடீர்த் தாக்குதலை நடத்தியது.

ரோந்து நடவடிக்கை ஒன்றுக்காக மேற்படி காவல் நிலையில் மேலதிகமாகப் பொலீஸார் குவிக்கப்பட்டிருந்த சமயமே அது தாக்குதலுக்கு இலக்கானது என்றும் -

இதனாலேயே இத்தாக்குதலில் பொலீஸார் அதிகளவு இழப்புக்களைச் சந்திக்க நேரிட்டது என்றும் - கூறப்படுகின்றது.

மேற்படி காவல் நிலை மீது அதிரடித் தாக்குதல் நடத்தி அதைக் கைப்பற்றிய புலிகள், அதனை சற்று நேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்துவிட்டு, மேலதிக இராணுவம்

(12ஆம் பக்கம் பார்க்க)

கட்டுநாயக்காவில் இருந்து

## விமானப்படைத் தளத்தை இடம்மாற்றுவதற்கு முடிவு!

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள விமானப் படைத்தளத்தை அந்த இடத்திலிருந்து இடம்மாற்றுவதற்கு அமைச்சரவை கொள்கை அளவில் இணக்கம் கண்டுள்ளது.

நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டது.

இதுவிடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு உரிய தரப்பினருடன் கலந்தாலோசித்து விமானப் படைத் தளத்தை எங்கு அமைப்பது என்பதை முடிவு செய்து அதனை நடைமுறைப்படுத்தும். (உ-10)

## வடமராட்சிக் கடலில் நேற்று மீன்பிடிக்கத் தடை!

### கரையோரப் பகுதியும் சுற்றிவளைப்பு

தென்மராட்சி,நவ.2

வடமராட்சி வடக்குக் கடற்பகுதியில் நேற்றுக் காலை மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர் மாலை வேளையில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மீனவர்கள் நேற்றுக் கடலுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட சமயத்தில் உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானாறு உட்பட கரையோரப் பகுதிகளில் பாரிய தேடுதல் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பலை அங்கிருந்து எடுத்துச்செல்லும் நடவடிக்கை நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்டதாகவும் -

அதனாலேயே மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் - கூறப்படுகிறது. (உ-ஒ-117)

## பொருளாதாரத் தடையை நீக்கியதாக ஜனாதிபதி கூறியதற்கு புலிகள் மறுப்பு

வவுனியா,நவ.2

தமிழ் மக்கள் மீதான - குறிப்பாக வன்னிப் பகுதி மீதான - பொருளாதாரத் தடைகளை தமது அரசு நீக்கியதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, சி.என்.என். தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதை விடுதலைப் புலிகள் கண்டித்துள்ளதோடு, அதனை மறுத்தும் உள்ளனர்.

இது தொடர்பாக "புலிகளின் குரல்" வானொலியின் மூலம் விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாவது:-

சி.என்.என். தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அளித்த பேட்டியில், இலங்கை அரசு தமிழ்மக்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத்தடை என்ற மனித உரிமை மீறல் குறித்து கேட்கப்பட்டபோது, ஐ.தே.க. கொண்டு வந்த பொருளாதாரத் தடையை, தாம் நீக்கிவிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

1990ஆம் வருடம் வன்னிப்பகுதி மீதும், யாழ்.பகுதி மீதும் இலங்கையின் அப்போதைய ஆளுங்கட்சியான ஐ.தே.க. பொருளாதாரத்தடை விதித்தது.

1994ஆம் ஆண்டு பொ.ஐ.மு. ஆட்சி ஏற்றபின்னர் இந்தப் பொரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழக் கோரிக்கையை புலிகள் கைவிட்டால் பேச்சு!

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜே.வி.பி.

கொழும்பு,நவ.2

தமிழீழக் கோரிக்கையையும், ஆயுதங்களையும் புலிகள் கைவிட்டால் அவர்களுடன் பேசுமாறு அரசை ஜே.வி.பி.கோரும்.

- இவ்வாறு ஜே.வி.பி. நேற்று கொழும்பில் வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இனரீதியான அரசியல் பங்கீடு மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்து இந்த விஞ்ஞாபனத்தில் ஏதும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் உதவியை ஜே.வி.பி. நாடாது என்றும் -

உள்ளூர் உற்பத்தித்திறனை அதிகரிப்பதும் அதில் நாடு தங்கியிருப்பதை உறுதிப்படுத்துவதும் ஜே.வி.பியின் குறிக்கோள் என்றும் -

அந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் மீது சூடு!

### காத்தான்குடியில் சம்பவம்

காத்தான்குடி,நவ.2

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரான சட்டத்தரணி யூ.அப்துல் மர்சூர்க் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் காத்தான்குடியில் உள்ள தமது இல்லத்துக்கு அருகே வைத்து சுடப்பட்டார். பலத்த காயங்களுக்கு உள்ளான அவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மர்சூர்க்கின் கார்ச் சாரதியும் படுகாயமடைந்தார்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் மீது வன்முறைகள் தூண்டிவிடப்பட்டிருப்பதையே இது காட்டுகின்றது" - என்றார் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம்.

"இங்கு விடுதலைப் புலிகள் எங்கள் எதிரிகள் அல்லர்; எங்களுக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர்தான் பொது எதிரியாகவும், நேரடியான எதிரியாகவும் செயற்பட்டு வருகின்றனர்." - என்று அவர் குறிப்பிட்டார். (உ)

## முன் பிணை அனுமதி கோருகின்றார் எஸ்.பி. திஸநாயக்கா

கொழும்பு,நவ.2

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசிய முன்னணிப் பிரமுகருமான எஸ்.பி.திஸநாயக்கா தமக்கு முன்பிணை அனுமதி வழங்கும்படி கோரி உயர் நீதிமன்றில் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

லஞ்ச ஊழல் குற்றத்தடுப்பு ஆணைக்குழு தன்னைக் கைது செய்வதையோ, விசாரணை செய்வதையோ அல்லது வாக்குமூலம் பெறுவதையோ தடுப்பதற்கு அவர் இவ்வாறு நீதிமன்றில் முன் பிணைஅனுமதி கோரியுள்ளார்.

சமுர்த்தி நிதியைக் கையாடல் செய்தது உட்பட 6 குற்றச்சாட்டுக்களின் பேரில் தன்னையும் தனது குடும்பத்தவர்களையும் கைது செய்து, இம்சைப்படுத்துவதற்கும் அதன் மூலம் அரசியல் இலாபம் தேடமுற்பட சிலர் முயல்வதாக அந்த மனுவில் அவர் தெரிவித்துள்ளார். (உ-10)

## முன்னாள் அமைச்சர் ரணதுங்கவை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,நவ.2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் றெஜி ரணதுங்கவைக் கைது செயது எதிர்வரும் 15ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கம்பஹா நீதிவான் செனிவிரத்ன பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கம்பஹா, பெத்தியாகொட பகுதியில் ஐ.தே.கட்சி ஆதரவாளர் ஒருவர் தாக்கப்பட்டு, பின்னர் ஆஸ்பத்திரியில் சிகிச்சையின் பின்னர் உயிரிழந்திருந்தார். அந்தச் சம்பவம் தொடர்பாக சில தினங்களுக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த றெஜி ரணதுங்க, நேற்று இந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும்

## 4 கட்சிகளின் வேட்புமனுக்களை நிராகரிக்கக் கோரி வழக்கு?

### தமிழ்க் கூட்டமைப்பு தாக்கல் செய்யும்

கொழும்பு,நவ.2

யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் நான்கு கட்சிகளின் வேட்புமனுக்களை ரத்துச் செய்யுமாறு கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்படவிருக்கின்றது. இது குறித்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஆராய்ந்து வருகின்றது.

ஐ.தே.கட்சி, ஈ.பி.டி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகியவற்றின் வேட்புமனுக்கள் சட்டபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை என்று வேட்புமனுத் தாக்கலுக்கான இறுதி நாளன்று யாழ்.தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு தனது ஆட்சேபனையை தெரிவித்திருந்தது. இந்த ஆட்சேபனையை யாழ்.தெரிவத்தாட்சி அதிகாரி நிராகரித்துவிட்டார்.

இதனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய கூட்டமைப்பு சட்ட ஆலோசனை கோரியிருப்பதாக கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### அரசியல் நாகரிகத்தைக் கடைப்பிடித்து

# சுதந்திரம், சமாதானம் இரண்டையும் நிலைநிறுத்தக் கூட்டமைப்பு பாடுபடும்

## வேட்பாளர் சிவஞானம் சொல்கிறார்

யாழ்ப்பாணம்,நவ.2

நாகரிகமான அரசியலைக் கடைப்பிடிக்கவும், சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை நாடாளுமன்றத்தில் நிலைநிறுத்துவதற்காகவுமே தேர்தலில் போட்டியிட முன்வந்தோம். யுத்தத்தை நிறுத்திப் புலிகளுடன் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் பிரதான நோக்கமாகும். அதற்காகக் கூட்டமைப்புப் பாடுபடும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழர் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடும் யாழ்.மாவட்ட வேட்பாளரும் யாழ்.ப.நோ.கூ.சங்கத் தலைவருமான சீ.வி.கே.சிவஞானம்.

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் 'ஒசுசல' மருந்து விற்பனை நிலையத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிவஞானம் உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானத்தையும் யுத்தநிறுத்தத்தையும் வலியுறுத்தி 1988 இல் வெள்ளைக்கொடி இயக்கமொன்றை நடத்தினோம். அதே பாணியில் இப்போதும் அவற்றை வலியுறுத்துகின்றோம். நான்கு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பை அமைத்து தமிழர் பிரதிநிதித்துவத்தை நிலைநிறுத்துவதற்காகத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளோம்.

நாட்டில் தொடர்ந்துகொண்டிருக்கும் கொடிய போரை முடிவுக்குக் கொண்டுவரவும் -

விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பித்து சமாதானத்தை நிலைநாட்டவும் -

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு பாடுபடும். அதன் நோக்கங்களும் இவைதான்.

நாங்கள் எந்தக் கட்சிக்கும் எதிரானவர்கள் அல்லர். ஆயினும் நாகரிகமான அரசியலின் தேவையை உணர்த்தவும் அதன் அவசியம் கருதியும் நாங்கள் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தோம்.

தேர்தலில் வென்று, மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்குமானால் கூட்டுறவுத் துறையிலும்,



உள்ளூராட்சி சேவையிலும் பணியாற்றுவோரின் நலன்களிலும், ஓய்வூதியர்களின் பிரச்சினைகளிலும் அதிக கவனம் செலுத்துவேன் - என்று அவர் தனது உரையில் தெரிவித்தார்.

விற்பனை நிலையத் திறப்பு விழாவில் சங்கத்தின் உபதலைவர் பெ.ஜேக்கப் இயக்குநர்களான எஸ்.ரி.கணநாதன், எஸ்.தார்சீசியஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

(ஐ-17)

# பேசாலைப் பாடசாலையில் நேற்று மாணவர் பகிஷ்கரிப்பு

மன்னார்,நவ.2

மன்னார், பேசாலையில் பாடசாலை ஒன்றின் மாணவர்கள் நேற்றுப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளியாள் ஒருவரால் அந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்தே பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆயினும், மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசப் மற்றும் பொலீஸ் அதிகாரிகள் ஆகியோர் நேற்று நண்பகல் பாடசாலைக்குச் சென்று மாணவர்களுடன் பேச்சு நடத்தியதையடுத்து, மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வகுப்புகளுக்குச் சென்றனர்.

(ஒ-3)

### வர்த்தக நிலையங்களில்

# விலைப்பட்டியலை பார்வைக்கு வைக்காதோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,நவ.2

இருபாலைப் பகுதியில் விலைப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படாமை மற்றும் பொதுமக்களுக்கு காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச் செயல்கள்ல் ஈடுபட்டதாகக் கூறப்படும் 5 வர்த்தகர்களுக்கு நேற்று யாழ். நீதிமன்றம் அபராதம் அறவிட்டதுடன் எச்சரிக்கையும் செய்தது.

கோப்பாய்ப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இருபாலைச் சந்தியில் திடீர்ப் பரிசோதனை செய்யப்பட்ட போது ஐந்து வர்த்தக நிலையங்களில் பொதுமக்களின் பார்வைக்கு விலைப் பட்டியல் வைக்கப்படாதிருந்தமையும், காலாவதியான பொருள்களை விற்பனை செய்து வந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அவர்களுககு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, குற்றத்தை ஒப்புக்கொண்ட கடை உரிமையாளர்களுக்கு ரூபா 5 ஆயிரம் முதல் 8ஆயிரம் வரையிலான அபராதங்களை விதித்தார்.

தற்போதைய திருத்திய உணவுச் சட்டத்தின் படி விலைப்பட்டியலை பொதுமக்களின் பார்வைக்கு வைக்காமலிருப்பதும், காலாவதியான பொருள்களை விற்பனை செய்வதும் தண்டனைக்குரிய குற்றங்களாகும். இத்தகைய குற்றங்களை ஒரு வர்த்தகர் மீண்டும் புரிவது கண்டறியப்பட்டால், அவருக்கு குற்றப்பணம் அறவிடப்படுவதுடன் சிறைத்தண்டனையும் வழங்கமுடியும் என்று நீதிவான் எச்சரித்தார். (ஒ-6)

## தேர்தலுக்கு முன் நிவாரணத்தை பெற அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,நவ.2

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னர் டிசெம்பர் மாதத்துக்கான நிவாரணப் பொருள்களை பொதுமக்களுக்கு விநியோகித்து முடிக்குமாறு அரசாங்க அதிபர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்.

நவம்பர் மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்கள் விநியோகித்து முடிந்ததும் டிசெம்பர் மாதத்துக்கான நிவாரண விநியோகம் ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (க-6)

# தென்மராட்சிப் பகுதி மக்களுக்கான வாக்களிப்பு நிலையங்களின் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.2

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கு விசேட வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் இந்த விவரங்களை வெளியிட்டிருக்கின்றன.

இதன்படி, கைதடிப் பகுதியைச் சேர்ந்த வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் - 1இற்குரிய நிலையம் கைதடி குருசாமி வித்தியாலயத்திலும் -

இலக்கம் 2, 3இற்குரிய நிலையம கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும் -

இலக்கம் - 4இற்குரிய நிலையம் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் அமைக்கப்படும்.

தென்மராட்சியின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் வாக்களிக்க வசதிகள் செய்யப்படும்.

5,6,7,8,9,15,16,17,21,22 ஆகிய மாவட்ட இலக்கங்களையுடைய வாக்காளர்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வாக்களிப்பு நிலையத்திலும் -

10,11,12,13,14,18,19,20,23 மற்றும் 24 முதல் 44 வரையான மாவட்ட இலக்கமுடைய வாக்காளர்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திலும் -

வாக்களிக்க வசதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

# வீதியில் வந்தோரை மறித்து மோ.சைக்கிளுக்கு தீ வைப்பு!

## நகரில் புதன் இரவு சம்பவம்

யாழ்நகரில் கன்னாதிட்டிச் சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இனந்தெரியாத நபர்களால் வழிமறிக்கப்பட்டு தாக்கப்பட்டதுடன், அவர்களது மோட்டார் சைக்கிள் தீ வைத்து எரிக்கப்பட்டதாகவும் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

யாழ்நகரில் உள்ள உணவகம் ஒன்றில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற அடிதடிச் சம்பவத்தின் தொடர்ச்சியாகவே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றிருப்பதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தீமூட்டி எரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் எரிந்து சேதமடைந்த நிலையில் யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

அன்றைய தினம் இரவு கன்னாதிட்டிப் பகுதியில் வங்கிக் கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த ரியூப் லைட்டுகள் சிலவும் அடித்து நொறுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். எனினும் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

(ஐ-6)

## ஆங்கில படிப்பு வட்ட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.2

யாழ். ஆங்கிலப் படிப்பு வட்டம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கின் இம்மாத நிகழ்வு, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

'பாடசாலைகளில் ஆங்கில இலக்கிய போதனை - சில வழிகாட்டுதல்கள்' என்ற தலைப்பில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் 'நாடகம்' என்னும் தலைப்பில் கலாநிதி இ.முருகையனும் -

'சிறுகதை' என்ற தலைப்பில் எஸ்.பத்மநாதனும் -

'கவிதைகள்' என்ற தலைப்பில் வி.பரந்தாமனும் -

கருத்துரை வழங்குவர். (ஐ)

## அறிமுறை, செய்முறை வகுப்புகள்

எதிர்வரும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு விருப்பத்திற்குரிய பாடமாக சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்குத் தோற்றும் மாணவர்களுக்கான அறிமுறை, செய்முறை வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இந்த வகுப்புகள் கோப்பாய்க் கோட்ட மாணவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும்-

யாழ்., நல்லூர்க் கோட்ட மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திலும் நடைபெறும்.

மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன், மதியஉணவு, எழுது கருவிகள் என்பவற்றை எடுத்து வருமாறு யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-ரி)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 19 - 07 - 1951



மறைவு 30 - 10 - 2001

## K.R.சிவசுப்பிரமணியம்

நாதஸ்வர வித்துவான் S.K. இராமமூர்த்தியின் சிரேஷ்ட புதல்வனும் ஆலய நாதஸ்வர வித்துவான் K.R. முருகானந்தம் (நடுவிலான்) அவர்களின் சகோதரரும் எமது ஆலய பரிபாலனசபை உறுப்பினர் சி.திவாகரனின் பாசமிகு தந்தையுமாகிய நாதஸ்வர வித்துவான் K.R.சிவசுப்பிமணியம் (பெரியதம்பி) அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களது துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கந்தர்வளவு ஸ்ரீ விநாயக அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

*புகையிரத நிலைய வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (94155)

ஆலய பரிபாலன சபை,
கந்தர்வளவு
ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் காளிகோயில்.



## தீபாவளியை முன்னிட்டு மலிவு விற்பனை

★ கைக்கடிகாரங்கள் ★ சுவர் மணிக்கூடுகள்
★ மணிக்கூட்டு பற்றறிகள்

## அல்டி எலக்ரோனிக்ஸ்

(C/18943) 15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## முக்கிய அறிவித்தல்

கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைக்குழுத் தேர்தல் நாளை (03-11-2001) சனிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது. எனவே தகைமை பெற்ற அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கிளைக்குழுத் தெரிவு நடைபெறும் இடங்கள்:*

1. கிளைஇல. 207,219 சங்கத் தலைமைக் காரியாலயம், நெல்லியடி.
2. கிளைஇல. 208,209 வெள்ளாம்போக்கட்டி பாலர் பாடசாலை.
3. கிளைஇல. 211ஏ, 211பி, 212 தவசிகுளம் றோ.க.த.க.பாடசாலை.
4. கிளைஇல. 210பி, 210சி, 213, 214, 215, 216 கொடிகாமம் ப.நோ.கூ. சங்க கட்டடம் சந்தை அருகில்.
5. கிளைஇல. 217, 221, 218, 224, 223 வரணி மத்தி சனசமூக நிலையம்.
6. கிளைஇல. 220, 222 கந்தப்பெருமாள் சனசமூக நிலையம், கறுக்காய்.

*கொடிகாமம்*
*ப.தெ.வ.அ.கூ.சங்கம்,*
*முடக்காடு வீதி,*
*நெல்லியடி, கரவெட்டி.* (94087)

செயலாளர்.



## மரண அறிவித்தல்

## பொன்னர் பாலசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னர் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் (31.10.2001) புதன்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் - அன்னம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை, சிவக்கொழுந்து (இந்தியா) ஆகியோரின் மருமகனும் தேவமலரின் (கொழும்பு) அன்புக் கணவரும் கஜிதரன் (கொழும்பு), இந்தியாவிலுள்ள பகீரதன், பாதுசா, விஜிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நவமணி (கொழும்பு), குலமணி, கனகமணி, தெய்வேந்திரம், தங்கமலர், குணரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செபமாலை மாதா கோயிலடி,*
*உடுவில் வடக்கு,*
*சுன்னாகம்.* (C/18945)

தகவல்:
வ.இரத்தினசிங்கம்
(மைத்துனர்)

## அமெரிக்க பொருளாதாரம் பெரு வீழ்ச்சி

நியூயோர்க்,நவ.2

அமெரிக்காவில் கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாதளவுக்குத் தற்போது பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜுலை, ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களிலேயே பொருளாதார வீழ்ச்சி ஆரம்பமானதாகவும் -

செப்டெம்பரில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களின் பின்னர் இந்தப் பொருளாதார வீழ்ச்சி மேலும் மோசமானதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# செம்பிறை சங்க சிகிச்சை நிலையமும் குண்டுத் தாக்குதலுக்கு தப்பவில்லை

## ஆனாலும் மறுக்கிறது அமெரிக்கா

காபூல்,நவ.2

ஆப்கானிஸ்தானின் கந்தகார் நகர் மீது நேற்றுமுன்தினம் அமெரிக்க விமானங்கள் நடத்திய கடும் விமானத் தாக்குதல்களில் சர்வதேச செம்பிறைச் சங்கத்தின் மருத்துவக் கிளினிக் ஒன்றும் தாக் கப்பட்டது.

இதில் 15 பொதுமக்கள் உயிரிழந்தனர் 30க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

கிளினிக்குக்கு அருகில் இருந்த தலிபான்களின் இலக்குகள் மீது அமெரிக்க விமானம் வீசிய 907.2 கிலோ கிராம் (2000 இறாத்தல்) நிறையுடைய குண்டே கிளினிக் மீது வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.


எனினும் இந்த தகவலை அமெரிக்கா மறுத்துள்ளது. கிளினிக்கின் அருகில் இருந்த தலிபான்களின் இலக்கு மீதே அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று அமெரிக்கக் பாதுகாப்புத் திணைக்கள பேச்சாளர் பிறயன் வைற்மன் தெரிவித்தார். அது உடனடியாகத் தாக்கப்பட வேண்டிய மிகச் சரியான தலிபான் நிலை என்றும்-

செம்பிறைச் சங்க அலுவலகமும் மருத்துவ நிலையமும் தாக்கப்பட்ட தலிபானின் நிலைக்கு மிக மிக அருகே இருந்ததாகவும் -

ஆனால் அவை இரண்டுக்கும் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை என்றும் -

தாக்கப் பயன்படுத்தப்பட்ட குண்டு செய்மதி மூலம் வழிநடத்தப்படுவது என்பதால் அது இலக்குத் தவறும் சாத்தியம் இல்லை என்றும் -

அவர் மேலும் சொன்னார். (ம)



தலிபான் நிலை என்று அமெரிக்காவால் கூறப்படும் - செம்பிறைச் சங்க மருத்துவ நிலையம் மீது 2000 இறாத்தல் குண்டு விழுந்து வெடித்தபோது பல நூறு அடிகள் எழுந்த புகை மண்டலம்.

# நான்காவது நபரும் அந்திரெக்ஸுக்கு பலி!



காதி நாயன்

நியூயோர்க்,நவ.2

நியூயோர்க் வைத்திய சாலையில் பணிபுரிந்த பெண் ஊழியர் ஒருவர் 'அந்திரெக்ஸ்' கிருமித் தாக்கத்துக்கு உள்ளாகி உயிரிழந்தார். அந்திரெக்ஸால் உயிரிழக்கும் நான்காவது அமெரிக்கர் இவராவார்.

ஏற்கனவே வாஷிங்ரனில் இரு வரும் புளோரிடாவில் ஒருவரும் அந்தி ரெக்ஸால் உயிரிழந்துள்ளனர். 17 பேருக்கு அந்திரெக்ஸ் தாக்கம் இருபபது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




மன்ஹட்டன் ஆஸ்பத்திரி

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தபால் ஊழியர்கள் 13ஆயிரத்து 300 பேர் 'அந்திரெக்ஸு'க்கு எதிரான 'அன்டிபயோட்டிக்' மருந்துகளை எடுத்துவருகின்றனர்.

காதி நூயன் (வயது 61) என்ற பெண்ணே அந்திரெக்ஸால் நேற்று முன்தினம் உயிரிழந்த இறுதி நபராவார். இவருக்கும் தபால் மூலமே 'அந்திரெக்ஸ்' தொற்று ஏற்பட்டிருக் கலாம் என்று கருதப்படுகின்றது.

இவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து இவருடன் பணியாற்றியவர்களுக் கும் உறவினர்களுக்கும் 'அந்தி ரெக்ஸ்' தொற்று உள்ளதா என்று அதிகாரிகள் தீவிர சோதனையிட்டு வருகின்றனர். இவர் பணியாற்றிய, கண், காது, தொண்டை ஆகியவற்றுக்கு சிகிச்சை அளிக்கும் மன் ஹட்டன் ஆஸ்பத்திரி மூடப்பட்டுவிட்டது. (ம)

# எண்ணெய்க் கப்பல்களை கடத்தியும் தாக்கலாம்!

## மேற்குலக நாடுகளில் புதிய அச்சம்

நியூயோர்க்,நவ.2

பாரிய எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களைப பயன்படுத்தி கரையோர நகரங்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் மேற்குலகில் புதிதாகக் கிளம்பியுள்ளது.

இந்த ஆபத்தைச் சமாளிக்கும் விதத்தில் புதிய சர்வதேச பாதுகாப்புக் குழு ஒன்று நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

நியூயோர்க்கிலுள்ள உலக வர்த்தகமையக் கட்டடங்கள் மற்றும் பென்டகன் என்பவற்றின் மீது கடந்த செப்டெம்பர் மாதம் விமானங்களைக் கடத்தி தாக்குதல்கள் நடத்தப்பட்டதை அடுத்தே எண்ணெய்க் கப்பல்களை கடத்தியும் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இயங்கும் எரிசக்தி நிறுவனமும் லண்டனில் இயங்கும் பாதுகாப்பு நிறுவனம் மற்றும் கப்பல் நிறுவனங்கள் இணைந்து இந்த புதிய குழுவை அமைத்துள்ளன.

துறைமுகப் பாதுகாப்பு, மாலுமிகளின் செயற்பாடு, சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதைகள் என்பன தொடர்பாக இந்தக் குழு கவனம் செலுத்தும்.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஆயுதம் தாங்கிய பாதுகாவலர்களைக் கடமையில் ஈடுபடுத்துவதை அந்தக் குழு தவிர்க்க இருப்பதாகக் கூறப்படுகின்றது. (ம-4)

# ஹமாஸ் இயக்க முக்கியஸ்தர் சுட்டுக் கொல்லப்பட்டார்!

ஜெருசலேம்,நவ.2



உயிரிழந்த ஹமாஸ் உறுப்பினர் இவரே

பலஸ்தீன ஆயுதக் குழுவான ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவரை இஸ்ரேலியப் படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

ஜமில் ஜட்லா என்பவரே கொல்லப்பட்டதாக இஸ்ரேலியத் துருப்பினர் தெரிவித்தனர்.

டெல் அவிவ் டிஸ்கோ நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு ஒன்றில் 20 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துடன் இவருக்குத் தொடர்பிருந்ததாகவும் -

இஸ்ரேலியப் பிரதேசத்துக்குள் புதிய தாக்குதல்களை நடத்த அவர் தயாராகி வந்தார் என்றும் -

இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் இந்தப் படுகொலையைக் கண்டித்துள்ளார். இதேவேளை - துள்கரம் மற்றும் நப்ளுஸ் பகுதிகளில் இடம்பெற்ற வேறு வன்முறைகளில் யஸர் அரபாத்தின் 'பாத்தா' அமைப்பைச் சேர்ந்த இருவர் இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்டனர்.

குவாலியாலா நகருக்கு அருகே இடம்பெற்ற மேலும் ஒரு வன்முறையில் இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனப் பொலீஸார் இருவரைச் சுட்டுக் கொன்றனர். (ம)

## மத்திய கிழக்கில் அமெரிக்க முயற்சிக்கு ரஷ்யாவும் ஆதரவு

மொஸ்கோ,நவ.2

மத்திய கிழக்கில் கடந்த ஒரு வருடகாலமாகத் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் வன்முறைகள், மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்க அதிபர் ஜோர்ஸ் டபிள்யூ புஷ் முன்வைத்துள்ள யோசனைகளை ரஷ்யா முழுமையாக ஆதரிப்பதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் இகோர் இவானோவ் தெரிவித்தார்.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் சந்தித்துப் பேசிய போது ரஷ்ய அமைச்சர் தமது ஆதரவை அவரிடம் நேரில் தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ரஷ்யாவின் முதலாவது முயற்சி இதுவாகும் என்றும் அவர் கூறினார். இந்தப் பிரச்சினைக்கு சர்வதேச ரீதியில் தீர்வு காணப்படுவதையே தமது நாடு விரும்புவதாகத் தெரிவித்த அவர், அந்த முயற்சியில் ரஷ்யா மட்டும் ஈடுபடக் கூடாது என்றும் சொன்னார்.

# உலகில் சமாதானம் ஏற்பட ஐ.நா. தீவிர பணியாற்ற வேண்டும்

## நெல்சன் மண்டேலா கோரிக்கை

கேப்டவுன்,நவ.2



உலகம் முழுவதும் சமாதானம் ஏற்படுவதற்கு இதற்கெனவே உருவாக்கப்பட்ட ஐநா.சபை தீவிரப் பணியாற்ற வேண்டும்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருவதை முன்னிட்டே நெல்சன் மண்டேலா மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளார்.

முழு உலகத்துக்கும் இன்று தேவைப்படுவது சமாதானம். சமாதானத்தைத் தவிர வேறு எதனையும் உலகம் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் கூறினார்.

வன்முறைகள் மற்றும் போர் நடவடிக்கைகள் என்பவற்றுக்கு மத்தியிலும் சில பிரச்சினைகளையும் சவால்களையும் தீர்க்கும் வழிகளை உலகுக்கு ஐ.நாவால் எடுத்துக்கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

செப்ரெம்பர் மாதம் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலையும் அவர் கடுமையாகக் கண்டித்தார். (ம-4)

# ஆப்கான் மக்கள் பட்டினியால் மடிவதைத் தடுக்க நடவடிக்கை

## அமெரிக்க அதிகாரிகள் தெரிவிப்பு

நியூயோர்க்,நவ.2


ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா நடத்திவரும் தாக்குதல்களினால் ஆப்கான் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

தாக்குதல்களால் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் ஆப்கான் மக்கள் பஞ்சம் பட்டினியில் சிக்கிக்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் அவர்களுக்கு அமெரிக்கா நிவாரண உதவிகளை வழங்க உள்ளது என்றும் -

இதற்கென ஒரு கோடி 12 லட்சம் டொலர் பெறுமதியான உணவுப் பொருள்கள் வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன எனறும் -

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிலையம் ஒன்று கூறி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவு வழங்குவதே தலையாயபணி என்பதைக் கவனத்திற்கொண்டு தேவையான உணவுப் பொருள்களை உடனடியாக ஆப்கானிஸ்தானுக்கு அனுப்ப துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அமைப்பு தெரிவித்தது. (ம-4)



அமெரிக்கத் தாக்குதல்களுக்கு அஞ்சி பாகிஸ்தானுக்குள் தஞ்சமடைந்துள்ள ஆப்கானிய குடும்பம் ஒன்றின் பச்சிளம்குழந்தை, என்ன நடக்கின்றது என்று தெரியாமல் தனது கூடாரத்தினுள் பரிதவித்து நிற்கும் காட்சி.

## உலக அரங்கில்

## நேற்றும் ஆப்கான் மீது கடும் விமானத் தாக்குதல்

காபூல்,நவ.2

26ஆவது நாளாக ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கப் படைகள் கடும் விமானத் தாக்குதல்களை நேற்றும் தொடர்ந்து நடத்தின.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு எல்லையோரம் இருப்பதாகக் கருதப்படும் தலிபான்களின் முக்கிய நிலைகள் மீது தொடர்ச்சியாக அமெரிக்க விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. சுமார் 25 குண்டுகள் வரை இப்பகுதியில் வீழ்ந்து வெடித்தாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்றைய தாக்குதல்களில் தலிபான்களின் கட்டளைத் தலைமையகம் சிதறடிக்கப்பட்டதாகவும் -

அவர்களது தொலைத் தொடர்பு நிலைகள் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால் தலிபான்களின் களமுனைத் தளபதிகளுக்கும் தலைமைப் பீடத்துக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு அவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடி வருவதாகவும் கூறப்பட்டது. ஆப்கானிஸ்தானின் மேலும் பல பகுதிகளிலும் அமெரிக்க விமானங்கள் நேற்றுக் குண்டுமழை பொழிந்தன.

மத்தியகிழக்கு விஜயத்தின் ஒரு பகுதியாக

# பிரிட்டிஷ் பிரதமர் ஜோர்டானுக்கு விஜயம்



ரொனி பிளயர் சிரியாவுக்குச் சென்றிருந்த சமயம் அந்நாட்டுப் பிரதமர் அல் அஸாட்டை சந்தித்தபோது

மத்திய கிழக்கு நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் நேற்று ஜோர்டான் போய்ச் சேர்ந்தார்.

தனது சிரிய மற்றும் சவூதி அரேபிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு அவர் ஜோர்டான் போய்ச்சேர்ந்தார்.

அங்கு அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன் ஜோர்டானில் உள்ள முஸ்லிம்களின் பிரசித்தி பெற்ற மசூதி ஒன்றுக்கும் அவர் விஜயம் செய்தார். அந்த மசூதிக்கு விஜயம் செய்த முதலாவது மேற்குலகத் தலைவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோர்டான் மன்னர் அப்துல்லாவையும் பிளேயர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்று கூறிக்கொண்டு ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திவரும் தாக்குதல்களுக்கு முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காகவே பிளயர் மத்தியகிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். (ம-4)

# கால்நடை வளர்ப்போருக்கான முழுநாள் பயிற்சிக் கருத்தரங்கு

## வடமராட்சியில் நடைபெற்று வருகிறது

தென்மராட்சி, நவ. 2
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை கால்நடை உற்பத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் பருத்தித்துறைப் பிரதேசத்தில் உள்ள கால்நடை வளர்ப்போருக்கான கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி தொடர்பான பயிற்சிக் கருத்தரங்குகளைக் கிராமிய மட்டத்தில் நடத்தி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை துன்னாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கால்நடை வளர்ப்போருக்கான முழுநாள் பயிற்சிக்கருத்தரங்கு கிராம அலுவலர் கே. எஸ். சிவராசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆர். ஞானசேகரம், பருத்தித்துறைக் கால்நடை வைத்தியர் அலுவலக வைத்திய அதிகாரி டாக்டர் சி. வசீகரன். பிரதேச கால்நடை அபிவிருத்தி போதனாசிரியை திருமதி ம. ஏகாம்பரம் ஆகியோர் பயிற்சிக் கருத்துரைகளை வழங்கினார்.

கால்நடை வளர்ப்புத் தொடர்பான தொலைக்காட்சிப் படமும் காண்பிக்கப்பட்டது. பயிற்சியில் இப்பகுதியைச் சேர்ந்த 40 க்கு மேற்பட்ட பயனாளிகள் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே இப் பயிற்சிக் கருத்தரங்குகள் வியாபாரி மூலை, உடுப்பிட்டி, கரணவாய் ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளதாகவும், இப் பயிற்சிக் கருத்தரங்குகளை ஏனைய இடங்களிலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் —

அந்தந்தப் பகுதிக் கால்நடை வளர்ப்போர் சங்கத்தினர் கால்நடை வைத்தியர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கருத்தரங்குகளுக்கான திகதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-117)

# சிறுப்பிட்டியில் இளைஞர்கள் நடத்திய கசிப்பு வேட்டை!

யாழ்ப்பாணம், நவ. 2
சிறுப்பிட்டி தெற்கில் கசிப்பு உற்பத்தி, கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட வீடு ஒன்றினுள் புகுந்த இளைஞர் குழு 20 போத்தல் கசிப்பையும், ஒரு பரல் கோடாவையும் அங்கிருந்து மீட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

இவ்வாறு மீட்கப்பட்ட கசிப்பு, கோடா என்பன உடனடியாகவே கசிப்பு விற்பனையில் ஈடுபட்டவரின் வீட்டு முற்றத்தில் ஊற்றி அழிக்கப்பட்டது.

சிறுப்பிட்டி தெற்கு சனசமூக நிலையத்தைச் சேர்ந்த இளைஞர் குழுவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்தச் சமூக சீர்திருத்த நடவடிக்கை குறித்து ஊர் மக்கள், இளைஞர்களைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

(க-7)

### யாழ். போதனா ஆஸ்பத்திரியில்

# 40 சடலங்கள் வைக்கக்கூடிய பிரேத அறை கட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ். போதனா வைத்திய சாலையில் 40 சடலங்களை வைக்கக் கூடிய நவீன முறையிலான பிரேத அறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போதுள்ள பிரேத அறையில் 12 சடலங்களை மட்டுமே வைக்கக் கூடிய வசதிகள் உண்டு. மேலதிகமாக சடலங்களை வைப்பதனால் பிரேத அறையிலிருந்து துர்நாற்றம் எழுகிறது இதனால் சூழல் மாசடைவதுடன், ஆஸ்பத்திரியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

10 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் பிரேத அறைக்கான நிதியினை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(க-ரி-180)

# கலை நிகழ்வு ஞாயிறு நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியின் வணிக மாணவர் மன்ற நிதிக்காக நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த கலை நிகழ்வு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-4)

# கந்தபுராண படிப்பு

சுழிபுரம், நவ. 2
சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயிலில் கந்தபுராணப்படிப்பு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

மூன்று மாதங்களுக்குத் தொடர்ந்து தினமும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை இந்தப் புராணப்படிப்பு இடம்பெறும்.

புராணபடன உரையாசிரியர் சைவமணி சி. மருதபிள்ளை, பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் ஆகியோர் உரை கூறி வருகின்றனர்.

(க-7-28)

# யாழ். சுகாதார ஊழியர்களுக்கு இம்மாதமே இடைக்காலப் படி!

யாழ்ப்பாணம், நவ. 2
அரச ஊழியர்களுக்குத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ஆயிரத்து இருநூறு ரூபா இடைக்காலப்படி யாழ். சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு நவம்பர் மாதச் சம்பளத்துடன் இணைத்தே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த சுற்றறிக்கை ஒன்றை யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை —

யாழ். குடாநாட்டில் உள்ள அனேகமான அரச திணைக்களங்கள் தமது ஊழியர்களுக்கு இந்த இடைக்காலப் படியை ஒக்ரோபர் மாதச் சம்பளத்துடன் வழங்கியிருந்தது தெரிந்ததே.

(க-7-135)

# கவனிப்பாரற்ற நிலையில் வீதி

சுழிபுரம, நவ. 2
தொல்புரம் சிக்காய் வயல் ஊடாக வட்டு. வடக்குப் பகுதியைச் சென்றடையும் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாமல் சேறும் சகதியும் நிறைந்த இடமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதியைத் திருத்தம் செய்து தருமாறு அந்த வீதியில் வாழ்பவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியும், எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது. மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இந்த வீதியினூடாக போக்கு வரத்துச் செய்ய முடியாமல் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

(க-7-28)

# ஆலய வெளிவீதி திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், நவ. 2
மூளாய் காளிகோவிலில் புதிதாக அமைக்கப்பட்ட வெளிவீதி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் வேட்பாளரும், வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவருமான ந. திரிலோகநாதன் இந்த வீதியை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து சித்தன்கேணி, காரைநகர்ப் பகுதிகளில் ந. திரிலோகநாதன் தேர்தல் பிரசாரத்திலும் ஈடுபட்டார்.

(க-7)

# 317 தபாற் பொதிகள்

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 317 தபாற் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 41 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-6)

# மாதொருபாகனிடம் மாங்கனி பெற்ற மங்கையர் திலகம் புனிதவதியார்

சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரிய புராணத்தில் காரைக்காலம்மையார் சரிதம் மிகவும் சிவபக்தி நிறைந்ததாகும். இதில் சைவ சித்தாந்தக் கருத்துக்களும் காணப்படுகின்றன. காரைக்காலம்மையார் சைவசமயக் குரவர்களுக்கு முன் வாழ்ந்தவர். இவரது காலம் கி. பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென ஆய்வு ஆசிரியர் கருத்தாகும்.

இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்து காட்டியவர் காரைக்கால் அம்மையார். இவர் தனது இல் வாழ்க்கையில் சிவனடியாருக்கு திருவமுது படைத்து மகிழ்ந்தவர். ஒரு சமயம் தனது கணவரின் வேண்டுதலால் இறைவனிடம் இரந்து மாங்கனி பெற்றவர். இதனால் காரைக்காலம்மையாரை கணவன் தெய்வப் பிறவியாகக் கருதி தூர விலகி வாழ்ந்தான்.

பிறிதொரு சமயம் கணவனான பரமதத்தன் தனது மனைவியான காரைக்காலம்மையாரின் பாதம் பணிய நேர்ந்தது. தனது கணவன் தன் காலில் வீழ்ந்ததும் அம்மையார் அதிர்ந்து போனார். ஒரு பெண்ணின் வாழ்வில் நடக்க ஒண்ணாதது நடந்ததால், தனது இல்லற வாழ்வை வெறுத்தார்.

பரமதத்தனாகிய கணவன் இவ்வாறு அம்மையாரது பாதம் பணிய நேர்ந்ததால் தனது கணவனுக்கென்றே தாங்கிய அழகு நிரம்பிய ஊன் பொதியை நீக்கி, கயிலையில் உள்ள உமையுடைய திருவடிகளை நிதம், நிதம் வணங்கும் பேய் வடிவம் தந்து அருள வேண்டும் என்று சிவபெருமானுடைய திருவடிகளைத் தொழுது நின்றார் காரைக்காலம்மையார்.

இவ்வாறு வேண்டியதும் அப்புனிதவதியார் தமது திருமேனியில் இருந்த தசையாலடைத்த நிரம்பிய அழகெலாம் அற்று, ஞானம் மிகுந்த என்புடம்பாகி, விண்ணும், மண்ணும் வணங்கிய பேய் வடிவமானார். அம்மையாரின் திருவுள்ளம் பரிபக்குவ நிலையடைந்தது. பூதகணங்களில் தானும் ஒருவராகிய விருப்ப மிகுதியால் சிவப்பரம் பொருள் மீது "அற்புதத் திருவந்தாதி" பாடி அருளினார்.

## ஞானக் கதிர்

தொடர்ந்து ஞானமுதிர்ச்சியோடு "திரு இரட்டை மணி மாலை" பாடினார். அம்மையாருக்கு கைலாய மலைக்கு செல்லும் பேரவா உண்டாகியது. கயிலை நோக்கி விரைந்தார். அம்மையாரின் பேயுருவைக் கண்டவர்கள் தூர விலகி ஓடினார். சிவபெருமான் உறையும் கயிலாய மலையைக் காலால் நடந்து செல்ல விரும்பாமல் தலையால் நடந்தார்.

இந்த அரும்பெரும் காட்சியைக் கண்ட உமையானவள் "எம்பெருமானே ஒரு என்புடல் இங்கு தலையால் நடந்து வருகிறது என்னே இதன் அன்பு" என்றலும், இறைவன் "இவள் எம் அம்மையே" என்றார். காரைக்காலம்மையாரும் "அப்பா" என்று கூவி அழைத்து பணிந்து தொழுது எழுந்தார்.

இறைவன் அவரை நோக்கி உனக்கு வேண்டுவது யாது? என்று வினவலும், அம்மையார், "தேவரீரிடம் மாறாத அன்பு, பிறவாதிருக்கும் வரம், பிறந்தாலும் தேவரீரை மறவாது இருத்தல் மேலும் அறவா நீர் ஆனந்த நடனஞ் செய்யுங்கால் உன் திருவடியின் கீழ் நான் அமர்ந்து இருக்க வேண்டும்" என்றார்.

இதனைக் கேட்ட இறைவன், நீ தென்திசையின் கண் விளங்கும் திருப்பழனத்தில் உள்ள திருவாலங்காடு என்னும் திருத்தலத்திற்குச் செல், அங்கே நாம் ஆடும் ஊர்த்த தாண்டவத்தைக் காண்பாயாக! முப்போதும் நீ அங்கே என்னைப் பாடித் துதித்து இருப்பாயாக என்றார். இதை ஏற்ற அம்மையார் திருவாலங்காட்டு திருமண்ணை காலால் மிதிக்க அஞ்சி தலையால் நடந்து சென்றார். சம்பந்தப் பெருமான் கூட திருவாலங்காட்டு திருமண்ணை காலால் மிதித்து நடக்க விரும்பாமல் தலத்தின் வெளிப்புறத்தில் துங்கினார். காரைக்காலம்மையார் திருவாலங்காட்டில் சிவபெருமானின் திருநடனம் கண்டு மகிழ்ந்து 'திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்' பாடியருளினார். ★

**பொ. சிவப்பிரகாசம்**
(கொழும்புத்துறை)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 | 02 |
| 04 | 11 |
| 1981 | 1999 |

## செல்வி ஆறுமுகம் சியாமளா

(A/L 2000 கலைப்பிரிவு மாணவி)

கலைத்துறையாம் கடல்நீந்திக் கரையேறி
சாதனை படைப்பாய் என்று எதிர்பார்த்தோம்!
தண்ணீரில் மூழ்கி கண்ணீர்க் கடலிலாழ்த்தி
சென்று இன்று இரண்டாண்டா?
நம்ப முடியவில்லை ...
என்றாலும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உன் நினைவுகள் மட்டும் எம்
நெஞ்சைவிட்டு நீங்குவதே இல்லை!

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்

சொம்பாவோலை,
களபூமி, காரைநகர்.

(94134)

உதயன்

## தீர்வை விடவும் அதிகாரமே முக்கியம்!

"இனப்பிரச்சினை தொடர்பாகத் தமது நிலைப்பாடு என்னவென்பதை சகல கட்சிகளும் இத்தேர்தலின்போது பொதுமக்கள் முன் வைக்கவேண்டும. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குத் தாங்கள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள், தீர்வுக்கான தங்களது யோசனைகள் என்பவற்றையும் அவை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்."

- இவ்வாறு கோரியிருக்கின்றது சமாதான ஆதரவுக் குழு (Peace Support Group).

தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகள் சகலவற்றிடமும் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்த அரசைத் தெரிவுசெய்யப் போகும் இந்தச் சமயத்தில் இத்தகைய கோரிக்கையை பொறுப்புணர்வோடு முன்வைக்கும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு. அதேபோன்று தமது நிலைப்பாட்டை மக்களுக்குத தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடும் கட்சிகளுக்குண்டு.

அதுவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. போன்ற - ஆட்சிக் கட்டில் ஏறக்கூடிய - அல்லது ஆட்சிக் கட்டில் ஏறும் தரப்பில் முக்கிய பங்காளிகளாக விளங்கக்கூடிய - கட்சிகளுக்கு உண்டு.

லண்டனுக்கு நான்கு நாள் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அங்கு இந்த நான்கு நாள்களுக்குள்ளும் பி.பி.ஸி. உலக சேவை, ஸி.என்.என். போன்ற சர்வதேச இலத்திரனியல் ஊடகங்கள் நான்குக்கு விசேட பேட்டிகளை வழங்கியுள்ளார்.

இலங்கையில் பொதுத் தேர்தல் காலத்தில் தாம் வழங்கிய இந்தப் பேட்டிகளில் தேர்தல் குறித்தோ, தமது அணிக்கு எதிராக இருக்கும் பிரதான கட்சியான ஐ.தே.க. குறித்தோ ஜனாதிபதி அதிகம் பிரஸ்தாபிக்கவில்லை. மாறாக, புலிகள் குறித்தும், அவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்தும், நோர்வே மத்தியஸ்தம் குறித்துமே ஜனாதிபதி அதிகம் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியைப் பேட்டி கண்ட அந்த நிறுவனங்களின் செய்தியாளர்களும், இலங்கையின் பொதுத் தேர்தல் குறித்து இந்தப் பேட்டியில் அதிக கேள்விகளை எழுப்பவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் குறித்தே ஜனாதிபதி சந்திரிகாவை அதிகம் துளைத்து எடுத்தனர்.

எனினும் தர்வுக்காக தம்மிடம் திட்டம் அல்லது யோசனை ஏதும் இருக்கின்றது என்றோ அல்லது அதன் விவரம் இதுதான் என்றோ அவர் திட்டவட்டமான பதிலைத் தரவில்லை - தீர்வு குறித்து அரசுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு புலிகள் இணங்கவில்லை என்று திரும்பத் திரும்பக் கூறியதைத் தவிர.

இதேபோன்று, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும் கூட, தாங்கள் ஆட்சிக்கு வந்தால் -

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடக்கும்; அதிகாரப் பகிர்வின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என்றெல்லாம் மொட்டையாகக் கூறுகின்றதே தவிர, தீர்வுக்கான தாங்களது யோசனை இதுதான் என்றோ அல்லது அதன் அடிப்படை இந்த வடிவத்தில் அமைந்திருக்கும் என்றோ திட்டவட்டமாக ஏதும் தெரிவிக்கவில்லை.

ஜே.வி.பி. கூட, தமிழர்களுக்கு அதிகம் அதிகாரப் பகிர்வு வழங்கப்படுவதையும், புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தப்படுவதையும் எடுத்த எடுப்பிலேயே எதிர்க்கின்றதே தவிர, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தனது யோசனை இது என்று ஆக்கபூர்வமான திட்டம் எதனையும் முன்வைப்பதாக இல்லை.

அதாவது -

வழமைபோல, இந்தத் தேர்தலின் போதும், நாட்டை உலுக்கும் மிகப் பெரிய பிரச்சினையான இனச்சிக்கலுக்கு தாங்கள் முன்வைக்கப்போகும் தீர்வு என்னவென்பதைப் பிரதான கட்சிகள் மக்களின் முன் வைக்காத நிலையிலேயே அது நடந்துமுடிய, ஏதோ ஒரு கட்சி அல்லது அணி ஆட்சிக் கட்டில் ஏறப்போகின்றது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதிலும் - முன்வைப்பதிலும் - பார்க்க, தாம் ஆட்சி - அதிகாரத்தைப் பிடிப்பதே, இக்கட்சிகளுக்கு முக்கியம் என்பதுதான் இதற்குக் காரணம்.

# குடிதண்ணீருக்காக 'பைப்'பைத் திறக்க அஞ்சும் ஊர்காவற்றுறை மக்கள்!

## 'தாங்கி'யில் அழுகிய நிலையில் வெளவால்கள்!!

ஊர்காவற்றுறை நகர மக்கள் குடிதண்ணீர்க் குழாய் ('பைப்'பை) திறக்கவே அஞ்சுகின்றனர்.

குடி தண்ணீருடன் அழுகிய மாமிசத்துண்டங்கள் வரத்தொடங்கியதை அடுத்தே மக்கள் அதனை பாவிப்பதைத் தவிர்த்து வருகின்றனர்.

ஊர்காவற்றுறை நகருக்கு குடிதண்ணீர் விநியோகிக்கும் தாங்கியில் வெளவால்கள் விழுந்து அழுகி, அவற்றின் சிதைவுகளே நீர்க்கம்பங்கள் ('பைப்') மூலமாக வருவதாகக் கூறப்படுகிறது.

இதனைக் கண்ணுற்ற பொதுமகக்கள் கிணறுகளில் இருந்தே தற்போது குடிதண்ணீரைப் பெற்றுவருகின்றனர்.

சுகாதாரச் சீர்கேடான முறையில் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுவது குறித்து பொதுமக்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர். (க-16)

### யாழ்.பஸ் நிலையத்தில் நிழல் குடைகள்!

யாழ்ப்பாணம்,நவ.2

யாழ்.மத்திய பஸ்நிலையத்தில் 10 லட்சம் ரூபா செலவில் பயணிகள் இளைப்பாறுவதற்காக நிழல் குடைகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிழல் குடைகளை அமைப்பதற்கு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தமிழ் விவகார அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அடுத்த இரண்டு வார காலத்தினுள் இப்பணிகள் முடிவடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-9)

### மண்டைதீவில் கைதான இளைஞர் விடுதலை

மண்டைதீவு படைமுகாம் பகுதியில் வைத்து கடந்த 29ஆம் திகதி இரவு 9.35 மணியளவில் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கேதீஸவரன் என்பவரே நேற்று காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு பொலீஸாரால் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவராவார்.

இவர் மீது வழக்குத்தொடர போதிய சாட்சியங்கள் இல்லை என்று பொலீஸார் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இளைஞரை விடுதலை செய்தார். (க-6)

## நாட்டு நடப்பு

### தெருக்குறள்

### கள்

1. மண்டி மதுவை மனதோடு மாந்தினார்க்கு
வண்டியே பகரும் சான்று.
2. தேடிப் புளித்த தென்னங்கள் அருந்தினோர்க்கு
யாண்டும் பேதி எதற்கு.
3. உண்ணான் உறங்கான் உளறுவான் உருண்டெழுவான்
வண்டி முட்டக் கள்ளருந்துவான்.
4. கட்டி அணைக்கப் பின் காலால் அடி வாங்க
இட்டமுடன் ஏவும் கள்.
5. கைகட்டி நின்று கரம் நீட்டிப் பருகுதலால்
பொய்ச்சாதி பேதமெல்லாம் போம்.
6. கண்துஞ்சும் காதடைக்கும் கண்ட இடத்தில் கழிவகற்றும்
வண்டிமுட்டத் தேங்கிய கள்.
7. அடிக்கும் அரவணைக்கும் அஞ்சாத வீரனாக்கும்
குடியைக் கெடுக்கும் குடி.
8. வண்டு தேள் கொடுக்கன் வாயாரக் குடித்த எச்சம்
உண்டவர்க்கு நஞ்சென் செய்யும்.
9. வடித்திடவே தான் வளர்த்த வளமார் பெருமீசை
தடுத்து நிற்க்கும் பூச்சி பூரான்தனை.
10. கட்டிய மனையாளும் காலன் போல் சாட்சி தரும்
முட்டிய கள் வெளியேறு முன்.

*- விகடகவி.*

# யாழ்.வைத்திசாலையில் மருந்துகளுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு இருந்தே வருகிறது!

## இதனை எவரும் மறுக்க, மறைக்க முடியாது என்கிறது நிர்வாகம்

யாழ்ப்பாணம்,நவ.2

யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து மருந்துகளுக்குத் தட்டுப்பாடு இருக்கவே செய்கிறது. இதனை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இதுதான் உண்மையான நிலை.

யாழ்.வைத்தியசாலையில் மருந்துக் கையிருப்பு எந்தவகையில் இருக்கிறது என்று எமது செய்தியாளர் வினவியபோது ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.

மருந்துத் தட்டுப்பாடு குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் கருத்து வெளியிடுகையில் -

யாழ்.வைத்தியசாலையில் ஒட்சிசன், பி.ஓ.பி. உட்பட முக்கியமான - அத்தியாவசியமான - மருந்துகளுக்குத் இடையிடையே தட்டுப்பாடு இருந்தே வருகிறது. முக்கியமான சில மருந்துகள் குறைந்த அளவிலேயே அனுப்பப்படுவதால், தட்டுப்பாடு நிலைமை தொடர்ந்தபடியே இருக்கிறது.

மருந்துகளுக்கு ஏற்படும் தட்டுப்பாடு காரணமாக வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் வெளியில் - தனியாரின் கடைகளிலேயே - அவற்றைப் பெறவேண்டிய நிலைமை உள்ளது. இது கடந்த சில வருடங்களாக நீடித்துவரும் தொடர்கதையாகும்.

அத்தியாவசியமான மருந்துகளின் பற்றாக்குறையினால் அல்லது அவை தீர்ந்துபோய் விடுவதால் குணமடையக் கூடிய நோயாளர்களும் சிலவேளைகளில் உயிராபத்தை எதிர்நோக்கும் இக்கட்டான நிலையும் ஏற்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் மருந்துகள் தொடர்பான நிலைமையை அன்றாடம் வந்துசெல்லும் ஆயிரக்கணக்கான நோயாளர்களும் மற்றும் மக்களும் அறிந்து வைத்துள்ளார்கள்.

இதேவேளை, யாழ்போதனா வைத்தியசாலைக்குத் தேவையான ஒரு தொகுதி மருந்துகள் இன்னும் ஓரிரு தினங்களில் எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரியவந்தது. (க-9-ரி)

### தென்மராட்சி மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,நவ.2

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் இருந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் சகல ஆவணங்களுடன் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முன்னர் பாடசாலையில் விண்ணப்பப் படிவத்தில் ஒப்பமிடுவதற்கு சமுகமளிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார்.

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,நவ.2

ஜி.சீ.ஈ. (உ/த) 2002ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றுகின்ற சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மாணவர்களை விண்ணப்பப் படிவத்தில் ஒப்பமிடுவதற்காக நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரிக்கு வருகைதருமாறு அதிபர் மு.பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (கு)

## தமிழ்க் கட்சி கூட்டமைப்புக்கு ஆதரவளித்து

# திருமலையில் தமிழர் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க அணிதிரளுமாறு கோரிக்கை

## பிரசாரத்தில் ஈடுபடவும் தயாராகிறது பொதுசன அமைப்பு

திருகோணமலை,நவ.2

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாப்பதற்காக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்க அணிதிரளுமாறு திருகோணமலை மாவட்ட தமிழர் பொதுசன அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்த அமைபபு நேற்றுமுன்தினம் விடுத்துள்ள பகிரங்க அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் குறைந்துவந்து கடந்த பொதுத்தேர்தலில் அது முற்றுமுழுதாக இல்லாமற்போய்விட்டது.

இந்த நிலை நீங்கி எதிர்வரும் பொதுத்தேர்தலில் திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் ஏற்படுவதற்கு வசதியாக தற்போது திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் பொ.ஐ.மு., ஐ.தே.கட்சி, ஈ.பி.டி.பி. மற்றும் ஏனைய கட்சிகளிலுள்ள தமிழ வேட்பாளர்கள் தேர்தலில் இருந்து விலகி தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

இதற்காக எமது அமைப்பு திருகோணமலை மாவட்டத்தில் வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

இந்தப் பிரசாரங்களில் ஏனைய தமிழர் அமைப்புகள் அனைத்தும் இணைந்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

### காரைநகருக்கான பாதைச் சேவை ஆரம்பம்

ஊர்காவற்றுறை,நவ.2

காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடற்படையினரால் நடத்தப்பட்டு வந்த 'பாதைச் சேவை' மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாதை பழுதடைந்ததன் காரணமாகவே கடந்த சில வாரங்களாக இந்தச்சேவை தடைப்பட்டிருந்தது. (க-16)

### நாளை

ஐப்பசி 17
சனிக்கிழமை
திதி : துதியை
பிற்பகல் 12.23 வரை
நட்சத்திரம் : கார்த்திகை
முற்பகல் 10.58 வரை
சுபநேரம் : 3.04 - 4.34
ராகுகாலம் : 9.04 - 10.34
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பொறுமை உடையவனுக்கே உலகம் சொந்தம்




மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.ஆதீனத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் குழந்தைப் பிள்ளைகளுக்கான இலவச வைத்திய சிகிச்சையை மேற்கொண்டது. வைத்தியப் பரிசோதனை நடத்திய குழந்தைகள் வைத்தியர், வைத்திய கலாநிதி செல்வி கலா சோமசுந்தரம், மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத் தலைவர் லயன் டாக்டர் நவமலர் கனகரத்தினம், சேவை இணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா, யாழ்.ஆதீன ஆயர் வண.எஸ்.ஜெபநேசன் மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்களைப் படத்தில் காணலாம்.

*(படம்: வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)*

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 22 - 07 - 1939



உதிர்வு 03 - 10 - 2001

திருமதி

## பரமேஸ்வரி நித்தியானந்தராஜா (தங்கம்மா)

*பாசத்தின் இருப்பிடமாய்*
*பண்பின் உறைவிடமாய்*
*நேசமுடன் எமை வளர்த்து*
*தேசம் புகழ வைத்த*
*எம் அன்புத் தெய்வத்துக்கு எமது அஞ்சலி!*

இன்று (02.11.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரது நினைவாக நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பாடசாலை வீதி,*
*தாவடி தெற்கு. கொக்குவில்.* (94116)

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25 - 04 - 1925



இறப்பு 08 - 11 - 1995

திருமதி

## கமலாம்பாள் சுந்தரமூர்த்தி

*(தொண்டமானாறு)*

*கண்ணை இமை காப்பது போல*
*கருத்துடன் எமைக் காத்த அம்மா!*
*காலங்கள் பல கடந்தாலும்*
*கலங்குகின்றோம் மாறாத உங்கள் நினைவாக!*

*210,ஆஸ்பத்திரி வீதி,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.* (94068)

- மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*தோற்றம்* *29 - 11 - 1937*



*மறைவு* *02 - 11 - 1995*

திருமதி

## கமலாதேவி பரம்சோதி

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

திதி: 26-10-2001

*பண்பின் பிறப்பிடமே!*
*பாசத்தின் உறைவிடமே!*
*ஆண்டுகளாறு சென்றாலும்*
*அழியவில்லை உம் நினைவு!*
*உமதான்மா உய்திபெற*
*இறைஞ்சுகின்றோம் இறையவனை!*

*சந்திரவளவு,*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.* (93778)

- குடும்பத்தினர்.

## பரிசளிப்பு விழா

சங்கானை,நவ.2

அராலி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, அதிபர் ம.மகாதேவா தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்பு விருந்தினர்களாக சங்கானைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா, ஜீ.ரீ.இசற். நிறுவனத்தின் கணக்காளர் பேர்சி ஜே.ஜெயக்குமார், போரூட் நிறுவனத்தின் யாழ்.மேற்கு சிரேஷ்ட திட்ட இணைப்பாளர் க.குணேந்திரதாசனும் கலந்துகொள்வர்.

புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் திறப்புவிழாவும் இடம்பெறும். தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (க-29)

## சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம்,நவ.2

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடந்த 38 வருட காலமாக காங்கேசன்துறை, புத்தளம், கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆளணி நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை புரிந்த த.இராசதுரையின் சேவைநலன் பாராட்டு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை சிமெந்துக் கூட்டுத்தாபன யாழ்.பொறுப்பதிகாரி எம்.எஸ்.கே.மகேஸ்வரன் தலைமையில் யாழ். அலுவலகத்தில் நடைபெறும். (ஐ)

## வெல்லம்பிட்டியில் கைக்குண்டுகள் மீட்பு

கொழும்பு,நவ.2

வெல்லம்பிட்டியப் பகுதியில் கடந்த செவ்வாயன்று தேடுதல் நடத்திய பொலீஸார் நான்கு கைக்குண்டுகளை மீட்டுள்ளனர்.

பாழடைந்த வீடு ஒன்றிலிருந்து இந்தக் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன என்றும் -

இது குறித்து மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் -

வெல்லம்பிட்டியப் பொலீஸார் அறிவித்துள்ளனர். (ம-7)

## பாஷையூருக்கு புதிய பங்குத்தந்தை

குருநகர்,நவ.2

பாஷையூர் பங்குத்தந்தையாக இறைபணிபுரிந்த அருட்திரு.சாள்ஸ் கொலின் அடிகள் சென்ற மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் யாழ்.ஆயர் இல்லத்துக்கு யாழ்.ஆயரால் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பாஷையூரின் புதிய பங்குத்தந்தையாக அருட்திரு.எஸ்.யேசுரட்ணம் அடிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (க-51)

## ரீ.வி. பார்க்க முயன்ற சிறுமியை மின் தாக்கியது!

தென்மராட்சி,நவ.2

தொலைக்காட்சி நிகழ்ச்சி பார்ப்பதற்கு மின் இணைப்பைப் பெறுவதற்காக 'சுவிச்'சை அழுத்திய சிறுமி மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்ட சம்பவம் கடந்த புதன்கிழமை புலோலி தெற்கு சாரையடியில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த நாகேஸ்வரன் மேகலா (வயது 14) என்ற இந்த மாணவி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

# ஷஷ்டி அப்த பூர்த்தி விழா


கொழும்பு 13, ஸ்ரீ வீரமஹா காளி அம்மன் சந்நிதானத்தில் இன்று (2001-11-02) வெள்ளிக்கிழமை தமது மணிவிழாவினை - மட்டுவில் பிரம்மஸ்ரீ அ.சிவஞான ஐயர் அவர்களின் ஆசியுடன் - கானும் சிவாகம பூஷணம் சிவஸ்ரீ வி.சுப்பிரமணியக் குருக்கள் - சரஸ்வதி அம்மாள் தம்பதியினர், தமது இஷ்ட சித்திகளைப்பெற்று, மேலும் பல்லாண்டுகாலம் மனநிறைவுடன் வாழவேண்டுமென அன்னை ஸ்ரீ வீரமஹா காளி அம்மனை வேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

வி.பரமேஸ்வரன் ஐயர் - குடும்பம்,
சி.ஷண்முகரத்தின சர்மா - குடும்பம்,
உடுவில்.

(C/18918)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 23 - 03 - 1932



உதிர்வு 02 - 11 - 1999

## அமரர் சாமிநாதர் ஜேசுதாசன்

*மரணத்துள் மறைந்தாலும்*
*எம்மனங்களில் மறையாது என்றும் வாழும்*
*உங்களை நினைவு கூருகிறோம்.*


*கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பிரிவால் துயருறும்:*
சகோதரி: செலஸ்ரீனா சாமிநாதர்.

(94033)

# 100ஆவது பிறந்த தினமும் நினைவு கூரலும்

மலர்வு 02 - 11 - 1902



உதிர்வு 26 - 08 - 1990

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருநெல்வேலி "நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட்" கல்வி நிறுவனத்தின் ஸ்தாபகருமான

அமரர்

## முருகேசு நாகலிங்கம் J.P. அவர்கள்

*(முன்னாள் இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்)*

"கல்விக்கு அதிபதியாய்"
"அன்பின் சிகரமாய்"
"பண்பின் பிறப்பிடமாய்"

கல்வித் தானத்திலே காலமெல்லாம் கழித்திட்ட எம் தெய்வத்தை அன்னாரின் நூறாவது பிறந்த நன்னாளிலே நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்!

*வீரபத்திர கோயிலடி,*
*திசமனை,*
*சுழிபுரம்.*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(94077)


# மக்கள் வங்கி

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### (பாவித்த மோட்டார் வாகனங்கள் விற்பனை)

பின்வரும் வாகனங்களை விற்பதற்கான விலைக்கோரிக்கைகள் கோரப்படுகின்றது.

50-6117 இலக்கமுடைய மஸ்டா வான்.
31-8966 இலக்கமுடைய மிற்சுபிசி ஜீப்

வடவலய உதவிப் பொது முகாமையாளர், மக்கள் வங்கி, 79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் பெறப்பட்ட படிவங்களில் விலைக்கோரிக்கை மனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கோரிக்கை தொடர்பான அறிவுறுத்தல்களும் நிபந்தனைகளும் கேள்வி மனுக்களுடன் வழங்கப்படும்.

திருப்பிப் பெறாத கட்டணமாக ரூபா.250/- செலுத்தி 2001.11.21ஆம் திகதி பி.ப.2.00 மணிவரை கேள்விமனுவுக்கான பத்திரங்களை மக்கள்வங்கி, வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியே திருப்பிப் பெறக்கூடிய கட்டணம் ரூபா 5000/-ம் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது செலுத்தப்படல் வேண்டும்.

தொலைபேசி: 021-2601, 021-2602
021-2956
தொலைநகல்: 021-2602, 021-2956

உதவிப் பொது முகாமையாளர்,
மக்கள் வங்கி, வடவலய அலுவலகம்,
79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(C/18917) 2001-10-20

# ஆட்சியாளருக்குத் தலையாட்டி நிதி வாங்கி மக்களுக்கு வாரிவழங்க நாம் தயாரில்லை!

## கூட்டணி வேட்பாளர் ஆனந்தசங்கரி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,நவ.2

ஆட்சியில் இருப்போருக்குத் தலையாட்டி, - தாளம்போட்டு - நிதியை வாங்கி மக்களுக்கு வாரிஇறைக்கிறார் டக்ளஸ். எமக்குக் கிடைக்கவேண்டிய சிறுதொகை நிதிகூட எமது கைகளை எட்டவில்லை. எனினும் அதற்காக அதிகாரத்தில் இருப்போரிடம் மண்டியிட நாம் தயாராக இல்லை.

நல்லூர் வன்னியசிங்கம் பொதுப் பணிமன்ற சனசமூக நிலையத்தில் தையல் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான தையல் இயந்திரங்களை வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் மாலை சங்கத் தலைவர் எஸ்.இரட்ணசபாபதி தலைமையில் நடைபெற்றது. அந்த வைபத்தில் ஆனந்தசங்கரி உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அபிவிருத்தி என்ற பெயரில் ஜனாதிபதி அம்மையார் தம்பி டக்ளஸ் தேவானந்தாவுக்கு பணத்தை அள்ளி வீசுகின்றார். தம்பியோ அதில் அரைப்பங்கை அபிவிருத்திக்கும் மிகுதி அரைப்பங்கை தனது பொக்கெற்றிலும் போடுகின்றார். இதுதான் குடாநாட்டின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் வேலைத்திட்டம்.

எமது கட்சியைப் பொறுத்தவரை அரசு எந்தவித நிதி உதவியையும் வழங்காத காரணத்தினால் நாம் எமது மக்களுக்கான வேலைத்திட்டங்கள் எதனையும் பெரிய அளவில் முன்னெடுக்க முடியாதுள்ளது. அரசாங்கம் சொல்வதற்கெல்லாம் தலையாட்டிச் செயற்படும் ஈ.பி.டி.பி. கட்சிக்கு அம்மையார் நிதியினை அள்ளிக் கொடுக்கின்றார். அவ்வாறு அரசு வழங்கிய பலகோடி ரூபா நிதியில் அரைவாசி மட்டுமே அபிவிருத்தி என்ற பெயரில் ஆலயங்களுக்கும், பொது அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும். எஞ்சிய நிதிக்கு என்ன நடக்குதோ எவருக்கும் தெரியாது. இதுதான் இன்றைய அபிவிருத்தி. இந்த நிதியின் அரசியல் உள்நோக்கத்தை மக்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும் - என்றார்.

### ரவிராஜ்

யாழ்.மேயரும் கூட்டணி வேட்பாளருமாகிய ரவிராஜ் தனதுரையில் -

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவது நிச்சயம்.

நாங்கள் அதிகார சக்திகளுக்குக் கட்டுப்படாமல், எமது மக்களின் உரிமைகள் - சுதந்திரத்துக்கு விலைபேசாமல், உறுதியான அரசியல் தலைமைத்துவத்தை மக்களுக்கு வழங்குவோம். அரசியல் நோக்கம் அற்ற அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்போம். இந்த நல்லூர்ப் பொதுச் சந்தையைக் கூட நவீன சந்தையாகக் கட்டியெழுப்புவோம்.

அபிவிருத்தித் தொண்டர்கள் என்ற பெயரில் ஈ.பி.டி.பி. மூலம் நியமனம் பெற்றோர் ஆட்சி மாறினால் தமது வேலை பறிபோகுமோ என்று அஞ்சுகின்றனர். இந்நிலையில் சரியான அரசியல் சக்திகளைப் பலப்படுத்த எமது இளைஞர் சமூகம் முன்வர வேண்டும்.

நேர்மையான கட்டமைப்புடைய கட்சியாக எமது கட்சி 50 ஆண்டுகளைக் கடந்து வந்துள்ளது. இது எவருக்கும் தெரியும். அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்வது எமது நோக்கம் அல்ல. தேர்தலில் வெற்றி பெற்றதும் குடாநாட்டில் வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர்களுக்கு அரசியல் சாராத - அச்சமின்றிப் பணியாற்றக்கூடிய - வேலைவாய்ப்புகளை வழங்கத் திட்டங்களைத் தயாரிப்போம்.

நாங்கள் சொகுசு வாழ்க்கை வாழ்வதாகவும், திருவிழாக் காலங்களில் பெட்டிக்கடை போட வந்தவர்கள் என்றும் எங்களை வர்ணிக்கின்றனர்.



ஆனால் டக்ளஸ் தேவானந்தாவுக்கு 18 கோடி ரூபாவுக்கு கொழும்பு பம்பலப்பிட்டி செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு அருகில் நவீன வசதியுடன் வீடு உள்ளது. அந்த வீட்டைப் புனரமைக்க 30 கோடி ரூபாவை அவர் மக்கள் வங்கியில் கடனாகப் பெற்றுள்ளார். அக்கடனுக்குப் பிணையாளியாக ஜனாதிபதி அம்மையாரே இருக்கிறார். இவையெல்லாம் மக்களுக்குத் தெரியுமா? நாம் மக்களோடுதான் உள்ளோம். வீடுவீடாகச் சென்று வருகின்றோம். ஆனால் ஈ.பி.டி.பியினர் கோட்டைகளில் பாதுகாப்பாக இருந்துகொண்டு மக்களைக் கூப்பிட்டுக் கதைக்கின்றனர். இதுதான் நிலை - என்றார் மேயர்.

வன்னியசிங்கம் பொதுப்பணிமன்றத்தின் முன்னாள் தலைவரும் அதிபருமாகிய அமரர் முருகேசு பரமேஸ்வரனின் உருவப்படம் நிலைய மண்டபத்தில் திரை நீக்கம் செய்யப்பட்டது.

கல்வியங்காடு வர்த்தகர்கள், கூட்டணிப் பிரமுகர்கள் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.(ஐ-180)

# இந்தியப் படையினருடன் கும்மாளம் அடித்தவர்கள் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க வந்துவிட்டனர்!

## பிரேமச்சந்திரனின் அறிக்கைக்கு புளொட் பதில்

யாழ்ப்பாணம்,நவ.2

இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களின் கூடாரங்களுக்குள் கும்மாளம் அடித்துக் குதூகலித்த கும்பல்களைச சேர்ந்தோர், கூட்டமைப்பு என்ற பெயரில் வாக்குக் கேட்டு இன்று தமிழ் மக்கள்முன் வந்துள்ளனர்,

புளொட் அமைப்பின் யாழ்மாவட்ட அமைப்பாளர் அல்வின் நவீந்திரராஜா விடுத்த பத்திரிகை அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகின்றனர் சித்தார்த்தனும் வரதரும்'' என்ற தலைப்பில் கடந்த 30 ஆம் திகதிய உதயனில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணித்தலைவர் க.பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கை ஒன்று பிரசுரமாகியிருந்தது.

இந்த அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலே புளொட் அமைப்பு நேற்று இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

வடக்கு - கிழக்கில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களின் கூடாரங்களுக்குள் கும்மாளம் அடித்துக் குதூகலித்த கும்பல்களின் செயல்களுக்கு அதிபராகப் பணியாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் மக்களின் காதில் பூச்சூட்ட நினைக்கின்றார். வரலாறுகளைத தமிழர்கள் மறந்துவிட்டார்கள் என்று அவர் நினைக்கிறார் போலும்.

### மண்டையன் குழுவை உருவாக்கியவர்

இளைஞர்களுக்கு எதிரான கொலை வெறித்தாண்டவத்தை நடத்துவதற்கு என மண்டையன் குழுவை உருவாக்கிய ஈ.பி.ஆர்.எல்எவ். சுரேஷ் பிரேமச்சந்திரன் தற்போது நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்னும் நப்பாசையில் கூட்டணிக் கூட்டுக்குள் புகுந்து தனது சாகசங்களை மறந்து அறிக்கைவிடும் பணியில் ஈடுபட்டு முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முனைகின்றார்.

நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றியே தீரவேண்டும் என்பதற்காக மட்டும் அமைக்கப்பட்ட இக்கூட்டு ஒப்பந்தத்தில் தனியாக எவரும் அறிக்கைகள் விடமுடியாது எனவும் -

கூட்டாகவே தயாரித்து வெளியிடப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால் இந்த நிபந்தனையைக் கூடச் சரியாகக் கடைப்பிடிக்க முடியாத இவர்களால் விடப்படும் தகவல்கள் எப்படி உண்மைகளைத் தாங்கி நிற்கும்?

தாம் அரசுடன் இணையவில்லை, ஆயுதம் தரிக்கவில்லை என்று கூறும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிதான் 1994இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமது தலைவர் பத்மநாபாவை மறந்து சந்திரிகா அம்மையாரின் திருமுகத்தைச் சுவரொட்டிகளில் பளிச்சிட வைத்துப் பிரசாரம் செய்தவர்கள்.

### ஆலோசகர் பதவி

அந்த நன்றிக்கடனுக்காகவும், விசுவாசத்துக்காகவும் அம்மையாரினால் சுரேஷ் பிரேமச்சந்திரன் மீன்பிடி அமைச்சில் எதுவித பணிகளும் இல்லாத ஆலோசகராக மாதம் 20 ஆயிரம் ரூபா சம்பளத்துடன் பதவியில் அமர்த்தப்பட்டார்.

தாம் ஆயுதம் தரிக்கவில்லை எனக்கூறும் சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் வவுனியா கூமாங்குளத்திலும் மின் மாற்றிகளுக்குக் காவல் புரிவதற்காக இராணுவத்திடமிருந்து பெறப்பட்ட ரி87, ரி56 ரகத்தைச் சேர்ந்த ஆயுதங்களுடனேயே தற்போதும் உள்ளனர். இதனை நாம் எவ்வாறு அர்த்தம்கொள்ள வேண்டுமென சுரேஷ் பிரேமச்சந்திரன் எதிர்பார்க்கின்றார்?

அது மட்டுமல்ல ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் அணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருவர் அண்மையில் யாழ்நகரில் கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்டு இன்றும்கூட சிறையில் உள்ளனர் என்பதை சுரேஷ் பிரேமச்சந்திரன் மறந்துவிட்டாரா? அல்லது எதிரிகளின் கட்டுக்கதையென கதையளக்கப் போகின்றாரா?

இந்த விடயங்களை எமக்கும் மக்களுக்கும் அவர் தெளிவுபடுத்த வேண்டும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

### நாரஹென்பிட்டி தற்கொலைத் தாக்குதலில்

# பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு மனித உரிமை அமைப்பு கண்டனம்

நாரஹென்பிட்டியில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கும் காயமடைந்ததற்கும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டுள்ள இந்த அமைப்பு விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த பொதுத் தேர்தலின் போதும் நடத்தப்பட்ட இரண்டு தற்கொலைத் தாக்குதல்களில் 23 பேர் கொல்லப்பட்டனர். அதே போன்று கடந்த திங்கட்கிழமை நாரஹென்பிட்டியில் நடந்த தாக்குதலிலும் இரண்டு பொதுமக்கள் பலியாகினர்.

இந்தத் தற்கொலைத் தாக்குதல்களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் எனத் தெரிய வருகிறது. எனவே விடுதலைப் புலிகள் பொதுமக்கள் மீது நடத்திவரும் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்குதல்கள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும் என்று உள்ளது. (க-4)

## தெய்வீக ஸ்தலங்களில்....



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் 20ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சபையின் உப தலைவியான திருமதி ஸ்ரீபாஸ்கரன் வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதை ஒட்டி அவரைப் பாராட்டும் வைபவம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் அங்கு இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்விவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் மற்றும் வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஐ-86)




கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயம் கடந்த 95ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது மிகவும் பாதிப்புக்கு உள்ளாகித் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது. சுமார் 20 லட்சம் ரூபா செலவில் புதிதாக மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கட்டடவேலைகள் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். (ஐ)



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாதஸ்வரக் கலைஞர்களான பிரபல தவில் வித்துவான் காலஞ்சென்ற வி.எ.இராமையாவின் மகன் இராமையா தர்ஷன் குழுவினர் அண்மையில் சுவிஸ்நாட்டில் பாஸல் நகரில் உள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் நாதஸ்வரக் கச்சேரி நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

ஆலய நிர்வாகிகளின் அழைப்பை ஏற்று இக்குழுவினர் சுவிஸ் சென்றிருந்தனர். (ஐ)



பருத்தித்துறை தம்பசிட்டி முத்துமாரியம்பாள் ஆலய அர்ச்சகர்களாகிய பாஸ்கர தேசிகர், இராஜேந்திர தேசிகர் ஆகியோருக்கு விசேட தீட்சை வழங்கி குருப்பட்டம் வழங்கப்பட்டது. பண்டிதர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு தீட்சை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-133)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சின்னாலங்கண்டி லேன், அரியாலையைச் சேர்ந்த அழகராசா அகிலா என்பவரின் தேசிய அ.அ.(இல. 796792841v), விசேட அ.அ.(இல. 0902005795) என்பன திருநெல்வேலி சிவன்கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலி சிவன்கோயில் குருக்களிடம் ஒப்படைக்கவும். (94130)

தட்டாதெருவைச் சேர்ந்த இ.நகுலேஸ்வரி என்பவருடைய தே.அ.அ. (இல.617050838v), விசேட அ.அ. (இல. 0902003109) என்பன 20.10.2001 அன்று திருநெல்வேலிக்கும், தட்டாதெருவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.18, அரசடி லேன், தட்டாதெரு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (94135)

## சேவையாளர் தேவை

உயர்கல்வி கற்கும் விழிப்புலனற்ற மாணவர் ஒருவருக்கு பாடக் குறிப்புக்கள், நூல்களை வாசித்து விடுவதற்கு சேவையாளர் தேவை. தொடர்புகளுக்கு: 158, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (94046)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 07.04.1974இல் பிறந்த, சித்திரை நட்சத்திரம், கனடா நிரந்தர பிரஜாவுரிமை உடையவருக்கு A/L படித்த, 25 வயதுக்கு உட்பட்ட, அழகிய மணமகள் தேவை. திருமணம் கொழும்பில் செய்து அழைத்துச் செல்வார். தொடர்பு: விளம்பர இலக்கம் 1384, மே/பா. உதயன். (94080)

## விற்பனைக்கு

HONDA SUPER CUB - C.50 ரூபா 20,000/- ஆவணங்களுடன் மற்றும் லுமாலா கியர் மொடல் GENTS துவிச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு. ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (பார்வையிட மாலை 4-6 மணிவரை) (94088)

கலர் மீன்கள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள், அழகுப் பொருள்கள், மீன் தொட்டிக்கு அடியில் போடும் வெள்ளைக் கற்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் பார்வையிடலாம்) (94030)

## BEACON

JAFFNA

G.A.Q.

புவியியல்

மீட்டல் வகுப்பு

*ஆரம்பம்:* 04. 11. 2001 ஞாயிறு

*நேரம்:* 9. 30

ஆசிரியர்:

K.A.ஞானேஸ்வரன்

B.A. (HONS) (94136)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

*உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சை*

கல்வியாண்டு 2001/2002

உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியில் உடற் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் 06. 11. 2001ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9. 00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு பல்கலைக்கழக சபை மண்டபத்துக்கு அழைக்கப்படுகின்றார்கள்.

சமுகமளிக்கும் போது பின்வரும் ஆவணங்களைக் கொண்டு வருதல் வேண்டும்.

- i. கல்வித் தகைமைப் பத்திரங்கள் மூலப்பிரதி மொத்தப் புள்ளி உட்பட (க.பொ.த. உயர்தரம்/சாதாரண தரம்)
- ii. பிறப்புச் சான்றிதழ் மூலப்பிரதி.
- iii. தேசிய அடையாள அட்டை.
- iv. மற்றும் பொருத்தமான ஆவணங்கள்.

பதிவாளர். (C/18931)

## காணவில்லை

671/2, கே.கே.எஸ்.றோட், பூநாறி லேனைச் சேர்ந்த செல்வரெட்ணம் விக்கினேஸ்வரி என்பவரது தேசிய அ.அ.(இல.625251680v), விசேட அ.அ.(இல.0902003083) மற்றும் குணரெட்ணம் குமுதரஞ்சனா என்பவரது தேசிய அ.அ.(இல.815924053v), விசேட அ.அ.(இல.0902040795) என்பன கடந்த 27.10.2001இல் காணாமற்போய்விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (94131)

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித்தொடரில் JEANRENOIR இயக்கிய பிரெஞ்சு மொழித் திரைப்படமான LA-GRANDE - ILLUSION (THE GRAND ILLUSION) எனும் திரைப்படம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்குப் புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (க-9-ரி)

## யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம் நடத்தும்

**இலங்கை நூலக சங்கத்தின் நிலை -I க்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்**

இடம்:- யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்.

காலம்:- நாளை (03. 11. 2001) சனிக்கிழமை காலை 9. 30 மணி.

*வகுப்பில் பங்குபற்ற விரும்புவோர் காலை 9. 00மணிக்கு தமது பதிவினை மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.*

C.N.வித்தியாதரன்
தலைவர் - யாழ்.றோட்டறிக் கழகம்,
12, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

கலாநிதி
S.T.B. இராஜேஸ்வரன்,
தொழில்சார் இயக்குநர்.

(C-18933)

## நன்றி கூறி பாராட்டி வாழ்த்துகின்றோம்

தொண்டமனாறு அருள்மிகு தச்சன்கொல்லை சித்தி வீநாயகர் தேவஸ்தான கட்டடநிதிக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து லட்சம் ரூபாவில் இரண்டரை இலட்சம் ரூபாவைத் தந்துதவிய



மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

வடமராட்சி E.P.D.P. அமைப்பாளர்
உயர்திரு.ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(ரங்கன்)
அவர்களையும்



வல்வெட்டித்துறை E.P.D.P. இணைப்பாளர்
உயர்திரு.ச.யோகராசா அவர்களையும்
*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

தச்சன்கொல்லை சித்திவிநாயகர்
தேவஸ்தான திருப்பணிச் சபையினர்,
தொண்டமனாறு.

(94140)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினராக இருந்த
"சர்வோதய அறங்காவலர்"

**அமரர் கந்தையா திருநாவுக்கரசு**

அவர்கள்

மக்களுக்கே தன்வாழ்வை மனமுவந்து தந்திட்ட
மாசிலா மனத்தொண்டன் மாண்புடையான் எமக்கு
பக்கபலமாயிருந்த பெரியோனின் நல்லான்மா
சாந்திபெற இறைஞ்சி அவர்வழியில் தொண்டுசெய்வோம்.

(94137) - யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கந்தையா திருநாவுக்கரசு**

03.10.2001இல் சிவபதம் அடைந்த வட இலங்கை சர்வோதய அமைப்பாளரும் தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்த மக்கள் தொண்டர் க.திருநாவுக்கரசு அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*3ஆம் வட்டாரம், புங்குடுதீவு.* (94132)

ஆலயபரிபாலன சபை,
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்.

## நவாலி ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் ஞாபகார்த்த நிதியத்தின் (HSCMF)

அனுசரணையுடன்

'கழுகுகள் விளையாட்டு கழகம்' நடத்தும்

**மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியும், பரிசளிப்பு விழாவும்**

காலம் : நாளை (03.11.2001) சனி பி.ப. 3.00 மணி.
இடம் : நெற்கொழு - கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானம்.
தலைவர் : திரு.க.இராமச்சந்திரன்.

பிரதம விருந்தினர்:
உயர்திரு.ஆ.சிவசுவாமி
*(பிரதேச செயலர், பருத்தித்துறை)*

இறுதியாட்டம்:
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம்
எதிர்
திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*கழுகுகள் வி.கழகம், நெற்கொழு, வல்வெட்டித்துறை.* (C/18930)

- போட்டிச் செயலாளர்.

## நீங்காத நினைவினில் ஆண்டுகள் இரண்டு



அமரர்
**யோசவ் அருளானந்தம்**
(ஓய்வுபெற்ற மாநகரசபை நூலகர்)

மலர்வு: 10.09.1930
உதிர்வு: 02.11.1999

ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறாது எம் கவலை
காலங்கள் பல கடந்தாலும்
கலையாது உம் நினைவு.

பிடாரி கோயிலடி,
ஆனைக்கோட்டை.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர். (94129)

## "ஹிருதய பூர்வமான" அஞ்சலிகள்



யாழ். குரும்பசிட்டியைச் சேர்ந்த
அமரர்
**சண்முகராசா சிறீஸ்கந்தராசா**
*(போட்டோ ஸ்ரீ)*

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அவருடைய ஆன்மா சர்வமும் வல்ல அம்பிகையின் பாதார விந்தங்களைச் சென்றடைய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*புன்னாலைக்கட்டுவன் வடக்கு, சுன்னாகம்.*

பிரம்மஸ்ரீ
ந.சபாரத்தினக் குருக்கள்.
*(உடையார் ஐயா குடும்பத்தினர்)*

(94138)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில்
04 • 09 • 1936



விண்ணில்
03 • 10 • 2001.

அமரர்

**மாரிமுத்துபிள்ளை கோபாலபிள்ளை**

இன்று (02.11.2001.) வெள்ளிக்கிழமை நடைபெறும் எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய சபிண்டிகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*477, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறை)* (94128)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, நவ. 3

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதிஆட்டத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் எதிர் யாழ். இந்துக் கல்லூரி. (ஒ-86)

## இதய அஞ்சலி

எமது கலாசாலை விஞ்ஞானப் பிரிவு
முதலாம் வருட ஆசிரிய மாணவி
**செல்வி ஆ. வசந்தா**
அவர்களின் அன்புத் தந்தையார்
**தம்பு ஆறுமுகம்**

அவர்களது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் துயரில் பங்கேற்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய மாணவர்கள்
விஞ்ஞானம் முதலாம் வருடம்
**பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை**
(94152)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்)

வட்டு மேற்கு வட்டுக்கோட்டை மயில உடையா வளவு செல்லத்துரை பாலசுப்பிரமணியம் 1-11-2001 அதிகாலை காலமானார்.

இவர் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சிவபாலன் (கனடா), சிவரஞ்சினி (கனடா), சிவராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நமசகுமார் (கனடா), ஜெயசங்கர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.
(சி/18939)

தகவல்;
நா. அம்பலவாணர்
(சகோதரன்)

### இராமமூர்த்தி சிவசுப்பிரமணியம்

(பெரியதம்பி - பிரபல நாதஸ்வர வித்துவான்)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட நாதஸ்வர வித்துவான் இராமமூர்த்தி சிவசுப்பிரமணியம் 30-10-2001 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராமமூர்த்தி - பொன்மாணிக்கம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான நெல்லிவனம் - மங்களம்மா தம்பதிகளின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்ற மாசிலாமணி - முத்துலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோராணியின் பாசமிகு கணவனும், முருகானந்தம், சண்முகநாதன், சுசீலாதாஸ், ஜெயக்குமார்(ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி). காலஞ்சென்ற சிவதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவமனோகரன் (லண்டன்), இராஜராஜேஸ்வரி, திவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சத்தியமூர்த்தி (அவுஸ்திரேலியா). இன்பராணி, விஜயலட்சுமி, காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி. செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(2-11-2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**திருமதி மனோராணி சிவசுப்பிரமணியம்**
காளிகோயிலடி, கோண்டாவில். (94153)

### ஆறுமுகம் கார்த்திகேசு

கிழவி தோட்டம் கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் கார்த்திகேசு நேற்று 01 - 11 - 2001 வியாழக்கிழமை காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பதேவி, புஸ்பராசா (உப அதிபர் யா / தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), புஸ்பநாதன் (லண்டன்), சுகுமாரன் (ஜேர்மனி), சாந்திவிதேவி (ஜேர்மனி), விமலாதேவி (நோர்வே) காலஞ்சென்ற தேவகுமாரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுந்தரலிங்கம், சந்திரவதனா (ஆசிரியை, யா/தும்பளை சி. ம. வி), சுபாசினி, விமலா, தேவாகரன், விவேகானந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02 - 11 - 2001 இன்று வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு தும்பளை கோரியடி மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'சந்திரோதயம்',
வெளிச்ச வீட்டொழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
**கா. புஸ்பராசா**
(மகன்)
(சி/18942)

வசதிகள் ஏதுமின்றி இயங்கும்

# யாழ். இளைஞர்சேவை மன்றம் மீது மாற்றாந்தாய் மனப்பான்மை

## பணியாளர்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 2

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்ப்பாண அலுவலகம் வாகன வசதி, பஸ் வசதி, றோணியோ வசதி மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருவதாக மன்ற வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

ஏனைய மாவட்டங்களிலுள்ள இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு சகல வசதிகளும் வழங்கப்பட்டிருந்தும், யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு இதுவரை எவ்வித வசதிகளும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மகரகமவிலுள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமையகத்துடனும், சம்பந்தப்பட்ட அமைச்சருடனும் பல தடவைகள் தொடர்புகொண்டபோதிலும் எவ்வித பலனும் ஏற்படவில்லை.

இதேவேளை — வெளிக்கள வேலைகளுக்காக குடாநாட்டின் பல்வேறு இடங்களுக்கும் செல்லும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணியாளர்கள் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது சொந்த வாகனங்களையே பயன்படுத்தி வருவதாகவும் — இதற்கென வழங்கப்படும் போக்குவரத்துப்படி கடந்த 6 மாதகாலமாக வழங்கப்படவில்லை எனவும் — தெரிவிக்கப்படுகிறது. (ஒ-4)

## இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

இடம்பெயர்ந்தவர்களுக்கான டிசெம்பர் மாத நிவாரணம் இந்தமாதம் 15 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டே இந்த முன்னேற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இது குறித்த அறிவுறுத்தல் பிரதேச செயலகங்கள் மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலகம் அனுப்பிவைத்துள்ளது. (ஒ.86)

## சமய சந்நிதிகளில்

இருபாலை வீதி, கிழக்கு கோண்டாவில் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சபரீச ஐயப்பர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு விசேட சமய கிரியைகள் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து பஜனை இடம்பெறும். (க-4)

★ ★ ★

தென்புலோலியூர் பெரிய நயினார் ஆலய கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறுகிறது. (ஒ 4-173)

★ ★ ★

இருபாலை கிழக்கு மண்டாக்குளம் திருவருள்மிகு ஸ்ரீ நாச்சியம்மாள் திருக்கோயில் புனருத்தாரண மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதல் நாள் சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை பக்தர்கள் எண்ணெய் காப்புச் சாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ-4)

## சாதாரண தர மாணவர்களுக்கு செய்முறைவகுப்பு

எதிர்வரும் ஜி. சீ. ஈ (சாதாரண தர) பரீட்சையில் 'சுகாதாரமும் உடற் கல்வியும்' பாடத்தை விருப்பப் பாடமாகக் கொண்ட மாணவர்களுக்கு அறிமுறை, செய்முறை வகுப்புகளை யாழ். கல்வி வலயம் நடத்துகிறது.

கோப்பாய்க் கோட்ட மாணவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்—

நல்லூர் கோட்ட மாணவர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் யாழ். வலயக் கல்வி அலுவலகத்திலும்—

இந்த வகுப்புகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வகுப்புகளுக்கு வரும் மாணவர்கள் சீருடையுடனும் உணவு மற்றும் தேவையான உபகரணங்களுடனும் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## குடாவில் கைதாகிய 4 பேர் காங்கேசன் தடுப்பு முகாமில்

குடாநாட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட நால்வர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அங்கு சென்று திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் என். ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

கடந்த 29 ஆம் திகதி உடுவில் பகுதியில் வைத்து மானிப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களான உடுவில் தெற்கைச் சேர்ந்த இராசகிளி ஜெயக்குமார் (வயது 20), உடுவில் தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை கௌரிதாசன் (வயது 24) ஆகியோர்—

கடந்த 30 ஆம் திகதி மானிப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட உடுவில் தெற்கு சுதுமலையை சேர்ந்த பெனடிக்ற்—ஜசிதரன் (வயது 22)—

கடந்த 29 ஆம் திகதி மண்டைதீவில் வைத்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இல. 11 முதலாம் வட்டாரம் அல்லைப்பிட்டி ஊர்காவற்றுறையைச் சேர்ந்த விசுவலிங்கம். கேதீஸ்வரன்—ஆகியோரே காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர். (ஒ-4)


## மணீஸ் வெளியீடு

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் முன்மாதிரிப் பரீட்சை 2002 பயிற்சி இலக்கம் 1 இன்று (2—11—2001) வெளிவருகின்றது. வினாத்தாள்கள் பெறவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும்.

குறிப்பு:-

2001இல் நடந்த பரீட்சையில் மணீஸ் வெளியீட்டால் பயனடைந்தவர்கள் பத்திரிகை வாயிலாகவும் நேரடியாக வந்தும் நன்றியும் பாராட்டும் தெரிவித்தவர்கட்கு எமது நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

தொடர்புகட்கு;
சதா பொன்ஸ்,
அல்வாய். T.P. 3206 P. O.

**மணீஸ் வெளியீட்டாளர்.**
(சி/18944)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை
**செல்வி மீ. சுந்தரராஜா அவர்களின்**
அன்புத் தந்தையார்
**கே. சுந்தரராஜா**

அவர்கள் 29—10—2001 திங்கட்கிழமை காலமானதையிட்டு மிகவும் கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

யா/வீமன்காமம் ம. வி.,
(94147) அதிபர், ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பனும் மக்கள் முன்னேற்றக் கழக விளையாட்டுக் குழுத் தலைவருமாகிய
**திவாகரன்** அவர்களின்
பாசமிகு தந்தையாரான
பிரபல நாதஸ்வர வித்துவான்
**K.R. சிவசுப்பிரமணியம் (பெரியதம்பி)**

அவர்கள் 30-10-2001 அன்று காலமாகியதையிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்களும்,**
**மக்கள் முன்னேற்றக் கழகமும்.**
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(94151)

# நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி,
# 2002ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல - 01

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் என்பனவற்றை 2002ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2002ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதிவரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் 15.11.2001ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியுடன் இரு பிரதிகளை *"தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி"* என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்குமுன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை *"உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"* என்ற முகவரியிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் பேரில் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 09.11.2001ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலி சந்தை, கொக்குவில் சந்தை, திருநெல்வேலி துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் பொருட்டு விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே 1[illegible],00,000/-ற்கும் 2,00,000/-ற்கும் 2,00,000/-ற்கும் குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. தெரிவுசெய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 23.11.2001ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு:-
1) திருநெல்வேலிச் சந்தைக்கடை இல.1, 11 கொக்குவில் உப-அலுவலக இறைச்சிக் கடைகள் ஆகியவற்றின் மூன்று மாத வாடகை, ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
2) சந்தைகளை குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருள்களின் பெறுமதியின் 3%ற்கு மேல் சந்தை வரி அறவிடக்கூடாது.
3) எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 1/-ற்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 2/-ற்கும் மேல் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக்கூடாது.
4) தங்களினால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு புறம்பாக தொகையின் 12.5% பொருள்கள் சேவைகள் வரியாக (ஜீ.எஸ்.ரி.) செலுத்தப்படல் வேண்டும். மேற்படி தொகையும் விண்ணப்பப்படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
5) கேள்விப்பத்திரத் தொகையுடன் 12.5% பொருள்கள் சேவைகள் வரி (ஜீ.எஸ்.ரி.) செலுத்தப்படல் வேண்டும்.
6) இறைச்சிக்கடைக்கு விண்ணப்பப்படிவம் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.

| சந்தைகள், இறைச்சிக் கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (ஜீ.எஸ்.ரி. - தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை | 500/- | 10,000/- | 36,28,850.00 |
| 2. திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம். | 500/- | 5,000/- | 3,45,650.00 |
| 3. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல.1 | 350/- | 3,000/- | 75,600.00 |
| 4. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 11 | 350/- | 3,000/- | 48,300.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1. கொக்குவில் சந்தை | 500/- | 5,000/- | 1,50,090.00 |
| 2. கொக்குவில் சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 350/- | 3,000/- | 16,500.00 |
| 3. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 1,89,000.00 |
| 4. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 350/- | 3,000/- | 52,360.00 |
| 5. கொக்குவில் உப-அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 2,36,250.00 |
| 6. பலாலி வீதி ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 64,790.00 |
| 7. கொக்குவில் உப-அலுவலக-ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 40,000.00 |
| 8. மஞ்சத்தடி மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 60,000.00 |
| 9. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100/- | 500/- | 1,000.00 |

*கோண்டாவில் பலாலி வீதி ஆட்டிறைச்சிக்கடை, மஞ்சத்தடி மாட்டிறைச்சிக்கடை, அரசடி வீதி மீன் சந்தை ஆகியவற்றிற்கு விண்ணப்பப்படிவம் கோருபவர்கள் அதற்குரிய இடத்தைத் தெரிவுசெய்து காணி உரிமையாளரின் சம்மதக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.*

# ஆடியபாதம் வீதி புதிய கடைகள்
# கேள்வி அறிவித்தல - 02

கடை இல.: 34, 35

12.10.2001ஆம் திகதிய உதயன், வலம்புரி பத்திரிகைகளில் பிரசுரமாகிய கேள்வி நிபந்தனைகளுக்கமைய மேற்படி இலக்க கடைகளை வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் 09.11.2001ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 2.00 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் 07.11.2001ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| கடை இல. | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த தொகை ஜீ.எஸ்.ரி. தவிர்ந்தது |
|---|---|---|---|
| 34 | 500/- | 10,000/- | 3,24,000/- |
| 35 | 500/- | 10,000/- | 3,24,000/- |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
29-10-2001.

க.மணிபல்லவராஜன் (ஜே.பி.யு.எம்.)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(C-18932)

# தேர்தல் வாக்காளர் அட்டைகள் இடம்பெயர்ந்தோர் பெற வசதி

## தபாலகங்கள் ஊடாக விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.2

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தென்மராட்சி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தத்தமது பகுதி நிரந்தர தபால் நிலையங்கள் மூலமாகவே பெற்றுக்கொள்ளமுடியும் என்று யாழ். மாவட்ட தேர்தல் திணைகளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதி பிரதம தபாலகங்களுக்கு தேர்தல் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-180)

## யாழ்.இந்து மகளிர் பரிசளிப்பு விழா

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். திருமதி ச.ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார்.

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்

*47/2, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி.*

## சர்வதேச ஊனமுற்றோர் தினம்
## 03.12.2001

மேற்படி தினத்தையொட்டி கீழ்க்காணும் போட்டிகள் எம்மால் நடத்தப்பட உள்ளன. போட்டிகளில் ஊனமுற்றவர்கள் மட்டும் பங்குகொள்ளலாம். இதற்கு வயதெல்லை இல்லை. பங்குபற்ற விரும்புபவர்கள் உடன் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்ப முடிவு திகதி:* 15.11.2001

*போட்டிகள்:*
1. சித்திரப் போட்டி
2. சுயமுயற்சிப் போட்டி
   நுண்கலை: கர்நாடக சங்கீதம், நடனம், தனி நடிப்பு, அபிநயம்.
   கைப்பணி:- கதிரை பின்னல், தும்புத்தடி, கூட்டுமாறு செய்தல், தையல் தொடர்பான பணிகள் முதலியன.
3. முச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி

*குறிப்பு:* போதிய விண்ணப்பங்கள் இல்லாத இடத்து போட்டி இரத்துச் செய்யப்படும்.

(C/18934) - செயலாளர்.

## கொக்குவில் இந்துக்கல்லூரி வணிக மாணவர் மன்றம்
## வணிகச்சுடர்- 06 வெளியீடு

*காலம்* :- இன்று (02.11.2001) வெள்ளிக்கிழமை காலை. 10.00 மணி.
*இடம்* :- கல்லூரி பிரதான மண்டபம்.
*தலைவர்* :- ஜெ.ஜெயகணேஷ்.
*பிரதமவிருந்தினர்:*- A.குகதாசன்.
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி)
*சிறப்பு விருந்தினர்:*- செல்வி S.வேலுப்பிள்ளை.
(ஆசிரிய ஆலோசகர்)

குறிப்பு :- 2001 வர்த்தகப்பிரிவு மாணவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

(94143) - வணிக மாணவர் மன்றம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற மாணவன் ஜெகனின் அன்புத் தந்தையார்
**மயில்லு கனகசபை** அவர்கள்

26-10-2001 வவுனியாவில் காலமானதை அறிந்து மிகுந்த மனவேதனையும் அதிர்ச்சியும் அடைந்தோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, இவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

2ஆம் அணியினர்,
கீன்பிடியியல் டிப்ளோமா மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(94145)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி இரத்தினம் இராசரத்தினம்**
(ஆச்சி)

*பாசமிகு அன்னையே அன்பின் திருவுருவே!*
*ஓர் ஆண்டு சென்றாலும் உமது நீங்கா*
*நினைவுகள் எமது உள்ளத்தை விட்டு அகலாது*
*உமது ஆத்மா சாந்தியடைய இறைவை பரராஜசேகரனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

*இணுவில் தெற்கு.* - குடும்பத்தினர்.

**ராஜா** யாழ்ப்பாணம்

குணால், மோனல், கரண் மற்றும் பலர் நடித்த

**பார்வை ஒன்றே போதுமே**

தினசரி : 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு : 10.30, 2.5 (புதிய நேரம்)

(C/18920)

**நாகம்ஸ்** சுன்னாகம்

M.G.R., ஜெயலலிதா, நாகேஷ்

**ஆயிரத்தில் ஒருவன்**

காட்சிகள்:- 11.00, 2.30 (பு.நே.) (ரீல்ஸ்)

நாளை முதல்

**நேசம்**

(94150)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ராம்கி, ரம்யா கிருஷ்ணன், விவேக் நடித்த

**பாளையத்து அம்மன்**

(ரீல்ஸ்)
தினசரி காட்சிகள்:
11.00, 2.30, 5.30 (பு.நே.)

(C/18924)





## யா/வேம்படி மகளிர் கல்லூரி

**வணிக மாணவ மன்ற நிதிக்காக**

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
விரிவுரையாளர்

**திருமதி சாந்தினி சிவநேசன்**

அவரது மாணவியும் யாழ்.பல்கலைக்கழக
நடனத்துறை மாணவியுமான

**செல்வி ஆனந்தஜோதி சண்முகநாதன்**

ஆகியோர் இணைந்து வழங்கும்

**நிருத்தியோபசார நாதசங்கமம்**

*இடம்* :- யா/வேம்படி மகளிர் கல்லூரி மண்டபம்
*காலம்* :- 04-11-2001 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி
*பிரதம விருந்தினர்*:- பேராசிரியர் சபா.ஜெயராஜா
(தலைவர், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம்: ரூபா 100/-

வணிக மாணவர் மன்றம்,
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

*விளம்பர அன்பளிப்பு:* சுப்பலோ வீடியோ & ஓடியோ கலர்லாப்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/18935)



## LIONS CLUB OF MANIPAY PARISH

We Serve

மானிப்பாய் பரிஷ் அரிமாக்கழகம்

2001/2002
306 B SRI LANKA SERVE TODAY FOR A BETTER TOMORROW

சமூக சேவைத்திட்ட நிதி திரட்டும் பணிக்காக
நடத்தப்படும் கலை நிகழ்வு

**நாட்டிய இசை விருந்து**

*இடம்* :- வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபம்
*காலம்* :- நாளை (03.11.2001) சனிக்கிழமை
*நேரம்* :- பி.ப. 3.00 மணி (புதிய நேரம்)

**நாட்டிய அமைப்பும் நெறியாள்கையும்**

திருமதி கிருஷாந்தி இரவீந்திரா
(நடன விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம் - யாழ்.பல்கலைக்கழகம்)

அணிசெய் கலைஞர்கள்:

பாட்டு : திரு.எஸ்.குமாரசாமி
(விரிவுரையாளர், கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை)
: செல்வன் தவநாதன் ரோபேட்
(இசைத்துறை மாணவன், இராமநாதன் நுண்கலைக்கழகம் - யாழ்.பல்கலைக்கழகம்)

மிருதங்கம் : லயஞானவாரிதி திரு.எஸ்.மகேந்திரன்
(விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம் - யாழ்.பல்கலைக்கழகம்)

வயலின் : செல்வி பாக்கியலக்ஷ்மி நடராஜா
(சிரேஸ்ட விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக்கழகம் - யாழ்.பல்கலைக்கழகம்)

கீபோட் : செல்வன் தவநாதன் ரோபேட்
(இசைத்துறை மாணவன், இராமநாதன் நுண்கலைக்கழகம் - யாழ்.பல்கலைக்கழகம்)

தபேலா : செல்வன் லோகேந்திரன் மகேந்திரன்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

மண்டப வாயிலிலும் நுழைவுக் கட்டணம் (ரூபா 100/-, 50/-) பெறலாம்.

**முக்கிய அறிவித்தல்**

இன்று பிற்பகல் 5 மணிக்கு மானிப்பாய் பரிஷ் அரிமாக் கழக, லியோக் கழக அங்கத்தவர்களை கழக செயலகத்திற்கு தவறாது வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

தலைவர் - மானிப்பாய் பரிஷ் அரிமாக் கழகம். (C/18937)



# பொதுத் தேர்தல் - 2001
# அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்

தன்னிகரற்ற தமிழ்த் தலைவர் ஜீ.ஜீயின் பேரன்
தமிழ் இனத்தின் சுதந்திரத்திற்காகத் தன்னுயிரை அர்ப்பணித்த
தியாக மாமனிதர் குமாரின் திருமகன்

**ஜீ.ஜீ.பொன்னம்பலம் (கஜேந்திரகுமார்)**

அவர்களை ஆதரிப்போம்.



**திரு.அ.விநாயகமூர்த்தி**
இல. 1



**திரு.சி.வி.கே.சிவஞானம்**
இல. 5



**திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம்**
இல. 8

தந்தையின் இலட்சியத்தைச் சிந்தையில் கொண்டவர். இளந்தலை முறையினன். இனிய சுபாவமுள்ளவர். அழகிய ஆங்கிலப் பேச்சுவன்மையும், அரசியல் ஞானமும் கைவரப்பெற்ற இளஞ் சட்டத்தரணி. இலட்சியப் பற்றாளர். தமிழ்த் தேசிய நலன்களுக்கு எதிராகச் சர்வதேச மட்டத்தில் செய்யப்படும் பொய்ப்பிரசாரங்களை முறியடிக்கவல்லவர் இவரே. இவருக்கும் தன்மானத் தலைவர் **திரு.அ.விநாயகமூர்த்தி** அவர்களுக்கும், **செயல்வீரர் திரு.சி.வி.கே.சிவஞானம்** அவர்களுக்கும் உங்கள் விருப்பு வாக்குகள் மூன்றினையும் அளித்து ஆதரியுங்கள்.

சூரியனுக்கு நேரே புள்ளடியிட்டுத் தமிழ்க் காங்கிரஸின் வெற்றியை, கூட்டமைப்பின் வெற்றியை, தமிழினத்தின் வெற்றியை உறுதிப்படுத்துங்கள்.



X

இல.
1இன் மேல் X இடுக.
5இன் மேல் X இடுக.
8இன் மேல் X இடுக.

**தமிழர் தாகம் சுதந்திர தாகம்.**

- வண்ணார்பண்ணை வாழ் மக்கள். (93906)

## வாக்காளர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்த முயற்சி

# வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தீவுப்பகுதியில் செயற்பட ஏற்பாடு செய்யுங்கள்!

## ஐரோப்பிய ஒன்றியத் தூதரிடம் தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

"யாழ்மாவட்டத்தில் - குறிப்பாக தீவுப்பகுதியில் - ஆயுதமுனையில் மக்களை வாக்களிக்க வைக்கும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. எனவே தீவுப் பகுதியில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் செயற்பட ஏற்பாடு செய்யவேண்டும்."

- கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவரிடம் தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பு இவ்வாறு கோரிக்கையை விடுத்துள்ளன.

கூட்டமைப்பைச் சேர்ந்த இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோர் இது தொடர்பாகத் தூதுவரை நேற்றுமுன்தினம் சந்தித்தனர்.

கூட்டமைப்புப் பிரதிநிதிகள் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

கடந்த தேர்தலில் தீவுப்பகுதியில் மோசடிகள் இடம்பெற்றன. தேர்தல் தினத்துக்கு முதல்நாள் இரவே வாக்குகளைப் பெட்டியில் போட்டு விட்டனர். தேர்தல் பணிக்குச் சென்ற ஒரு கட்சியின் முகவர்கள் தாக்கப்பட்டனர். இதேபாணியில் இம்முறையும் ஆயுதமுனையில் மக்களை அச்சுறுத்தி, தமக்கு ஆதரவாக வாக்களிக்க வைக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே இதைத் தடுத்து, நீதி, நியாயமான தேர்தல் இடம்பெற, கூடுதல் கண்காணிப்பாளர்களை அங்கு சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

வடக்கு - கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா, கொழும்பு மாவட்டங்களில் தங்கியுள்ள மக்கள் வாக்களிக்க அந்தந்த இடங்களில் விசேட வாக்களிப்பு நிலையங்களை அமைக்கவேண்டும்.

வன்னி, மட்டக்களப்பு மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்கள் வாக்களிக்க வாக்களிப்பு நிலையங்களை அமைக்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளருடன் ஆலோசித்து நடவடிக்கை எடுப்பதாகத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்நத 15 நாடுகளின் 42 பேர் தேர்தல கண்காணிப்புப் பணிக்காக இலங்கை வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

### பிரிட்டனில் வைத்து

# ஜே.வி.பி. தலைவரை புதனன்று ஜனாதிபதி சந்தித்துப் பேசினார்!

### அவருக்கு பாஸ்போர்ட்டும் கையளிப்பு

கொழும்பு,நவ.2

நாட்டைவிட்டு வெளியேறி, தலைமறைவாகி வசிக்கும் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவை பிரிட்டனுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அங்குவைத்து சந்தித்துப் பேசியதாக 'கொழும்பு பேஜ்' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் குறிபபிடப்பட்டிருப்பதாவது:-

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், எதிர்வரும் தேர்தலின் பின்னர் கூட்டு அரசொன்றை அமைக்கும் வழிவகைகள் குறித்து இருவரும் ஆராய்ந்தனர்.

பயங்கரவாதத்துக்கு எதிராக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்ககைகள் குறித்து ஆலோசிப்பதற்காக ஜனாதிபதி பிரிட்டன் சென்றதாகக் கூறப்படும் வேளையில், அவர் அமரசிங்கவை சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் அவர்களிடையேயான பேச்சின் முழுமையான விவரம் வெளியிடப்படவில்லை.

இதேசமயம், அமரசிங்கவுக்கு கடந்த மாதம் 26ஆம் திகதி பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகம், இலங்கைக் கடவுச்சீட்டு ஒன்றை வழங்கியுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலில் அவர் இலங்கைக்கு வந்து ஜே.வி.பிக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபட வசதியாகவே அவருக்கு கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு 'கொழும்பு பேஜ்' தெரிவித்துள்ளது. (உ-ஒ)

### மூதூரில் காவல் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதிக்கு விரைந்ததை அடுத்து பின்வாங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அங்கிருந்து பெருந்தொகையான ஆயுதங்களை எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மேலதிக இராணுவம் அப்பகுதியை நோக்கி முன்னேறிய சமயம் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

ஷெல் தாக்குதல்களில் சிக்கி ஐந்து பொதுமக்கள் காயமடைந்தனர்; மூன்று வீடுகள் சேதமடைந்தன.

காயப்பட்ட பொலீஸாரும், இராணுவத்தினரும், பொதுமக்களும் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் படகுகள் மூலம் திருகோணமலைக்கு எடுத்துவரப்பட்டு திருகோணமலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பொலீஸ் அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்த சிலர் உடனடியாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நேற்று மாலை மாற்றப்பட்டனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த பொலீஸாரில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து மூதூர், கட்டைபறிச்சான் ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் இரவிரவாகப் பெரும் தேடுதல் நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்ததாக அங்கிருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது புலிகள் தரப்பில் ஏற்பட்ட இழப்பு விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

மூதூர்ப் பகுதியில் கடந்த சில நாள்களாக தமிழர் - முஸ்லிம்கள் இடையே பதற்றம் மற்றும் கலவரச் சூழ்நிலை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-10)

### பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளாதாரத் தடையானது முன்னரை விட வலுவாக்கப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் மருந்துப்பொருள்கள், உணவுப்பொருள்கள், அன்றாட அத்தியாவசியப் பொருள்கள் ஆகியயாவும் பொ.ஐ.முன்னணியின் கட்டுப்பாட்டுக்கும், தடைக்கும் உட்படுத்தப்பட்டன.

வன்னிப்பகுதி மீது கடந்த 11 ஆண்டுகளாகத் தொடரும் பொருளாதாரத் தடையானது தமிழ் மக்களை மிக மோசமாகப் பாதித்துள்ளது. இந்தத் தடையால் வன்னிப் பகுதியில் பெரும்பாலான மக்கள் மெலிவுக்கும், நலிவுக்கும் உட்பட்டுள்ளனர்.

பல ஆயிரம் சிறார்கள் போஷாக்கின்மையால் மோசமான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இதனால் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன.

வறுமை காரணமாக பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

போஷாக்கின்மையால் தாய்மாரின் கருச்சிதைவுகள், சிசு இறப்புகள், நிறைகுறைப் பிரசவங்கள் ஆகியவை வன்னிப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளன.

அரசு விதித்த பொருளாதாரத்தடையும், அரசு திணித்த போரின் விளைவுகளுமே மோசமான இந்தப் பாதிப்புகளுக்கும் பிரதான காரணங்களாகும்.

- இவ்வாறு "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்தது. (உ-ஒ)

### முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது மன்றுக்கு சமுகம் தரவில்லை.

அதை அடுத்தே அவருக்கு வழங்கப்பட்ட பிணையை நீதிமன்றம் ரத்துச் செய்து, அவரைக் கைது செய்ய உத்தரவிட்டது.

இதற்கிடையில் -றெஜி ரணதுங்க தமக்கு நெஞ்சு வலி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து, நேற்று கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றிற்குச் சமுகம் தந்தார். அங்கு அவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### கடந்த வருடம் உயிரிழந்த ஆறு கடற்புலிகள்

ஒரு வருடத்தின் முன்னர் கடற்படையினரின் தாக்குதலில் உயிரிழந்த 6 கடற்புலிகளின் பெயர்களை 'புலிகளின் குரல்' வானொலி அறிவித்தது.

கடந்த ஆண்டு நவம்பர் இரண்டாம் திகதி தமிழீழக் கடற்பரப்பில் கடல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளின் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் -

★ கடற்புலி லெப்டினன்ட் கேணல சதீஸ்குமார் (பஞ்சலிங்கம் ஜீவாகரன - திருகோணமலை)-

★ கடற்புலி கப்டன் உயிரோவியன் அல்லது குமார் (கதிரவேலு சிவச்சந்திரன் - யாழ்ப்பாணம்) -

★ கடற்கரும்புலி கப்டன் வல்லவன் (நவநீதன் பத்மலதன் - யாழ்ப்பாணம்)-

★ கடற்கரும்புலி கப்டன் குமரவேல் (சுப்பிரமணியம் சுதர்சன் - யாழ்ப்பாணம்) -

★ கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் காந்தருபன் அல்லது பெத்தா (கனகாந்தம் ஆனந்தகிருஷ்ணன் - யாழ்ப்பாணம்) -

★ கடற்கரும்புலி மேஜர் இலக்கியன் (சிவசாமி ஹரிகரன் - முல்லைத்தீவு) -

ஆகியோர் வீரச்சாவைத் தழுவியதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

இவர்களின நினைவாகவே, கடநத செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக் கடலில் வைத்து படையினரின் எண்ணெய்த் தாங்கிக் கப்பலை புலிகள் தாக்கியழித்ததாகக் கருதப்படுகிறது.

### இளைஞர்கள் கைது

நீர்கொழும்பில் இருந்து படகு மூலம் இத்தாலிக்குச் செல்லவிருந்த 40 இளைஞர்களை நேற்றுமுன்தினம் மாலை சிலாபம் கடற்கரையில் வைத்துப் பொலீஸார் கைது செய்தனர். (ஒ)


## டாட் என்ரபிறைஸ்

வேண்டியதைத் தெரிவுசெய்திடுவீர் மலிவு விலையில்!

T.V., டெக், அன்ரனா வகைகள், எலக்ரிக் அயன் பொக்ஸ்,
எலக்ரிக் ஹீட்டர், எலக்ரிக் "கொட் பிளேட்" வகைகள்
ஓடியோ ச.டி (C.D) பிளேயர்கள், ஓடியோ சீ.டி (C.D) MP3 டெக் வகைகள்,
றேடியோக்கள்
"சார்ஜர்" ரோச் லைட்கள்
"சார்ஜர்" எமேர்ஜென்சி டியூப் லைட்கள்
"கஸியோ", "யமஹா" ஓர்கன் வகைகள்
மேசை, கூரை, "ஸ்ராண்ட்" மின்விசிறிகள், கமரா வகைகள்
மற்றும் மின் இலத்திரனியல் உபகரணங்களும்
கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள்
கைக்கடிகாரங்களுக்கான பற்றறி வகைகள்
ஓடியோ, வீடியோ, கசெற் வகைகள்
பிலிம் ரோல் வகைகள்
சகலவிதமான போட்டோ அல்பங்கள்
"F" பெர்பியூம் வகைகள்
கண்கவர் "செரமிக்" டீ செற் வகைகள்

யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியஸ்தாபனம்.

டாட் என்ரபிறைஸ்
இல.11, 12, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

DART ENTERPRISE
NO. 11, 12, Model Market,
JAFFNA.

(C/18938)



## IBMS

## அறிவித்தல்

IBMS இன் சங்கானை கிளை நிறுவனத்தில் மட்டும் நாளை சனிக்கிழமை (03-11-2001) விரிவுரைகள் நடைபெறமாட்டாது. ஞாயிற்றுக் கிழமை வழமைபோல் விரிவுரைகள் நடைபெறும்.

Director / Ad. (C/18941)



கணக்கீடு
Mr. BALAVASAN
(B.B.A. F.M.Sp.)
A/L 2003
வங்கிக் கணக்கிணக்கக்கூற்று
Sat.,Sun., 9-10
ஆரம்பம்:- 03.11.2001 9 a.m.
விக்னா
கல்வி நிறுவனம்.


## மரண அறிவித்தல்

### முருகேசம்பிள்ளை குணரட்ணம்

(காரைநகர்)

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசம்பிள்ளை குணரட்ணம் (R.M.P. வைத்தியர்) நேற்று (01.11.2001) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் இந்திராணியின் அன்புக் கணவரும் திருமதி சித்திரா பத்மானந்தன், சுரேந்திரன் (வீரகேசரி)) ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4/1, கில் வீதி,
நுவரெலியா.

தகவல்:
சித்திரா
(மகள்)

(C/18946)


## கணனிகள் விற்பனைக்கு

Pentium III - 1000mhz / 933mhz / 866mhz / 733mhz
Pentium 4 - 1.5 Ghz

கணனிகள், Printers, Scanners, UPS விற்பனைக்குண்டு.

யாழ்நகரிலேயே, தரமான கணனிகளை, கணனி உதிரிப்பாகங்களை நியாயமான விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

மேலதிக விவரங்களுக்கு ⇒ (C/18915)

Institute of Informatics Studies
100, Clock Tower Road Jaffna.
T.P. No: 21-2831





➡ வடக்குக் கிழக்கில் பொருளாதாரத் தடைகளை அகற்றிட....
➡ கடல் வலயத் தடைகளை நீக்கிட....

ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!

சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழர் விடுதலைக் கூட்டணி

சின்னம் X

இலக்கம் 4 X

(93901)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.